பக்கங்கள் : எட்டு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 24 திங்கட்கிழமை (10.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 14

# மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து

# ஜனநாயக சுதந்திரம் விஸ்தரிப்பு



## இம்முறை கிழக்கின் மீது விசேட கவனம் செலுத்தப்படுவதாகக் கூறுகிறார் ஜனாதிபதி

கொழும்பு, டிச. 10

மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தலும் ஜனநாயக சுதந்திரத்தை நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் விஸ்தரிப்பதுவுமே அரசாங்கத்தின் நோக்கம் - நிலைப்பாடு.

இம்முறை மனித உரிமைகள் தினக்கொண்டாட்டத்தின் மூலம் கிழக்குப் பகுதி மீது விசேட கவனம் செலுத்தப்படுகிறது. அந்தப் பகுதி பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப் பட்ட பின்னர், நீண்ட காலமாக மறுக்கப்பட்ட சுதந்திரத்தை அங்கு வாழும் மக்கள் இப்போது அனுபவித்து வருகின்றனர்.

இன்றைய சர்வதேச மனித உரிமைகள் நாளை ஒட்டி விடுத்த செய்தியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகளுக்கு ஆதரவளிப்பதில் தமது அரசு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் மனித உரிமைகள் தினச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இவ்வருட மனித உரிமைகள் தினமானது மனித உரிமைகள் தொடர்பான சர்வதேசப் பிரகடனத்தை ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக்கொண்டதன் 60 ஆவது ஆண்டு பூர்த்தியைக் குறித்து நிற்கின்றது. இது உலகின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஊடக அடக்குமுறைக்கு எதிராக ஊர்வலம்

கொழும்பு,டிச.10

ஊடக அடக்குமுறைக்கு எதிரான பெருமெடுப்பிலான ஆர்ப்பாட்டப் பேரணி இன்று கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

இன்று மதியம் 12.30 மணியளவில் நாரஹேன்பிட்டியவில் தொடங்கும் ஆர்ப்பாட்

(8ஆம் பக்கம் பார்க்க)

### பிரான்ஸுக்கு சட்டவிரோதப் பயணம்

## ஈழத் தமிழ் இளைஞன் சென்னையில் கைது!

சென்னை,டிசெ.10

போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி பிரான்ஸூக்குச் செல்லமுயன்ற ஈழத்தமிழ் இளைஞர் ஒருவர் சென்னை விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி குவிந்தன் (வயது 27) என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்.

கனேடிய கடவுச்சீட்டையும் 'விஸா'வையும் பணம் கொடுத்து சட்டவிரோதமாகப் பெற்ற குவிந்தன், அவற்றைப் பயன்படுத்தி இலங்கையிலிருந்து விமானம் மூலம் சென்னை வந்தார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 'ஏயர் பிரான்ஸ்' மூலம் பரிஸ் (8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் புதன், வியாழனில் சர்வமதத் தலைவர்களின் உயர் மாநாடு

### விசேட தூதுவர் யசூசி அகாஷியும் வருகிறார்

யாழ்ப்பாணம், டிசெ. 10

சமாதானத்தைச் சட்டி எழுப்பும் நோக்குடன் சர்வமதத் தலைவர்களின் உயர்மாநாடு எதிர்வரும் புதன், வியாழக்கிழமைகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பொதுநூலக கேட்போர் மண்டபத்தில் நடைபெறும் இந்த மாநாட்டில் ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார்.

ஏழு நாடுகளைச் சேர்ந்த மூத்த சமயத் தலைவர்கள் இந்த மாநாட்டில் பங்குபற்றுவர்.

மாநாட்டில் பங்குபற்றும் சமயத் தலைவர்கள் இலங்கையில் தொடர்ந்துகொண்டிருக்கும் வன்முறைகளுக்கும், முரண்பாடுகளுக்கும் சமாதான வழிமுறைகள் மூலம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரவு செலவுத் திட்டத்தில் அரசு வெல்லும்; அதன் பின்னர் மேலும் பலர் அங்கு பாய்வர்



### அமைச்சர் ஜெயராஜ் சொல்கிறார் இப்படி

கொழும்பு, டிசம்பர் 10

வரவு - செலவுத்திட்டத்தின் மூன்றாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெறும்போது, அதில் அரசு மேலும் பலமாக வெற்றி பெறும். அதன் பின்னர் எதிரணித் தரப்பிலிருந்து - குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து - மேலும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுப் பக்கம் பாய்வார்கள்.

- இப்படி உறுதியாக அடித்துக் கூறுகின்றார் அரசின் மூத்த அமைச்சர்களுள் ஒருவரும் அரசுத் தரப்பின் பிரதம கொறடாவுமான ஜெயராஜ் பெர்னாண்டோப்புள்ளே.

கொழும்பு சிங்கள வார (8ஆம் பக்கம் பார்க்க)

## கதிரவெளியில் தேடுதல்; 122 தமிழர்கள் கைது

மட்டக்களப்பு, டிசெ. 10

மட்டக்களப்பு மாவட்டம் கதிரவெளியில் நேற்றுமுன்தினம் காலை 9 மணி முதல் நண்பகல் வரை படையினரால் தேடுதல் நடத்தப்பட்டது.

இத்தேடுதலின்போது 122 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பொலனறுவைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். இத்தேடுதலில் 300 இற்கு மேற்பட்ட படையினரும், பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (அ-1)

## பரீட்சார்த்திகளுக்கு படையினர் வாழ்த்து

யாழ்ப்பாணம், சசெ. 10

இன்று ஆரம்பமாகும் ஜி.சி.ஈ. (சாதாரண) தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தமது இலக்கை அடைய வாழ்த்துகின்றோம் என்று படைகளின் பலாலி தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக செய்திக் குறிப்பு ஒன்றை தலைமையகம் நேற்றிரவு விடுத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் இம்முறையும் க.பொ.த.

(8ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக் கடற்படை அத்துமீறலை இந்தியக் கடற்படையினர் சமாளிப்பதா?

### பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு வைகோ கடிதம்



சென்னை, டிச.10

தமிழக மீனவர்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்திவரும் இலங்கைக் கடற்படையினருக்கு வக்காலத்து வாங்கும் இந்தியக் கடற்படை அதிகாரியின் கருத்துக்குத் தமது கடும் கண்டனத்தை வெளியிட்டு சீறிச்சினந்துள்ளார் ம.தி.மு.கவின் பொதுச் செயலாளர் வைகோ.

'இந்திய மீனவர்கள் மீது வேண்டுமென்றே இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூட்டை நடத்தவில்லை' - என்ற கடற்படையின் தமிழகக் கட்டளைத் தளபதி வேன் ஹேல்டரென் கூறிய கருத்துக்கே வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார். (8ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறோம்



கொக்குவில், கோண்டாவில் பிரிவிற்கு விவாக, இறப்பு, பிறப்பு (பதில்) பதிவாளராக நியமனம் பெற்றுள்ள எமது மதிப்பிற்குரிய திருமதி வரதலக்ஷ்மி சோமசூரியசிங்கம் அவர்களின் பணி நீண்ட காலம் மக்களுக்கு கிடைக்க வேண்டுமென மனமகிழ்வோடு வாழ்த்துகிறோம்.

நிர்வாகம்,
**காவேரி சில்க்ஸ்,**
48, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(சி/54669)

## உயர்வு கண்டு உள்ளம் மகிழ்கிறது



**இ. தமிழ்மாறன்**
B.A, DIP. in Edu, SLEAS

இலங்கை கல்வி நிர்வாக சேவையில்(SLEAS) சித்தியடைந்து வடமாகாண கல்வித் திணைக்களத்தில் திட்டமிடல் பிரிவில் சேவையாற்றும் எம் இனிய நண்பன் திரு. இரத்தினம் தமிழ்மாறன் அவர்களை வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

**ஆசிரிய நண்பர்கள்**
க. தர்மதேவன், வே. பரமேஸ்வரன், த. பிறேமச்சந்திரன், ந. கிருஸ்ணகுமார்.
(சி/54666)

வசீகர தோற்றத்திற்கு
**சந்தனாலேப**
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)



யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250

# மரண அறிவித்தல்

## அப்பையா கந்தையா

(அப்பிளா)



மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா கந்தையா 05.12.2007 புதன்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய அப்பையா- செல்லம்மா தம்பதியரின் மகனும் சிவபாக்கியம் (மாம்பழம்- கனடா), நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற கனகசபை (நில அளவையாளர்) மற்றும் கணபதிப்பிள்ளை (பற்பு) ஆகியோரின் மைத்துனரும் சறோஜினி (லண்டன்), மனோகரன் (கனடா), பாஸ்கரன் (இத்தாலி), றஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் இராசேந்திரம் (லண்டன்), கௌரி (கனடா), சுயாத்தா (இத்தாலி), கஜேந்திரன் (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும் சங்கரி (இத்தாலி), தனுசன் (கனடா), நகுலா(கனடா), கவிதா (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2007) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொட்டுப்பனை மயானத்தில்தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாகியப்பிட்டிச் சந்தி,
மாகியப்பிட்டி.
(சி/54672)

தகவல்:
சிவபாக்கியம்,
நாகேஸ்வரி (சகோதரிகள்).

# சான்றிதழ்களைப் பெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்.பல்லைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தில் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்து இதுவரை பட்டச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளாதவர்களை, பீட அலுவலகத்தில் நேரில் சமுகமளித்து பெற்றுக் கொள்ளுமாறு பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி கேட்டுள்ளார். (202)

# ஒளிவிழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,டிசெ.10

அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபையின் பாலர் பாடசாலையில் ஒளி விழாவும் பரிசளிப்பும் இன்று முற்பகல் 10 மணிக்கு இட[illegible]பறவுள்ளன.

[illegible] எ.ந.லோறன்ஸ் போதகரின் தலைமை[illegible]ல் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய ஆசிரியை திருமதி என். பேரம்பலம் கலந்து கொள்வார்.

# வெளிவிவகார அமைச்சு செயலாளராக காரியவாசம்

கொழும்பு,டிசெ.10

ஐ.நாவில் நிரந்தர பிரதிநிதியாக தற்சமயம் பணியாற்றும் பிரசாத் காரியவாசம் வெளிவிவகார அமைச்சின் செயளாராக நியமிக்கப்படவுள்ளார்.

இப்போது வெளிவிவகார அமைச்சின் செயலாளராக பணிபுரியும் பாலித கோஹன்ன இலங்கையின் அமெரிக்கத் தூதுவராக பதவியேற்கவுள்ளார் . (அ-1)

## வீடு விற்பனைக்கு

வைமன் றோட்டில் ஒருபரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: வரதலிங்கம் பரஞ்சோதி,
27/7, வைமன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**BARATHY**
**சித்தன்கேணி**

## தரம் 5 முதல் 11 வரை

இப் பிரதேசத்தின் பிரபல்யம் பெற்ற கல்வி நிறுவனத்தில் நீங்கள் கற்கத்தயாரகி விட்டீர்களா?
**புதிய வகுப்புகள் ஆரம்பம்**
**இன்று திங்கள் 12 P.m மணி**
நீங்கள் நன்கு அறிந்த மிகப்பிரபல்யமும் அதி திறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்

**எமது ஆசிரியர்களுக்கு நிகர் எதுவுமே இல்லை**

| | |
|---|---|
| விஞ்ஞானம்<br>திரு.தேவா<br>திரு. சனந்தன் | கணிதம்<br>திரு.சிவரூபன்<br>திரு. சிவா |
| தமிழ்/தமிழ் இலக்கியம்<br>திரு.குகபரன்<br>திரு. தமிழ்மாறன் | வரலாறு/புவியியல்/குடியியல்<br>திரு.சுதன்<br>திரு. சிவபாலன் |
| சமயம்<br>திரு.தரன்<br>திரு.கோகுலன் | ஆங்கிலம்<br>திரு.விஜயபாஸ்கர் |
| வர்த்தகம்<br>திரு.லோகேஸ்வரன் | புலமைப் பரிசில் வகுப்பு<br>திரு.கலாமோகன் |

குறிப்பு:
* மேற்குறிப்பிட்ட இப்பிரபல ஆசிரியர்கள் இப்பிரதேசத்தில் எமது நிறுவனத்தில் மட் டும்தான் கற்பிப்பார்கள்
* சென்ற ஆண்டு போல் இவ்வாண்டு மாணவர் தொகை வரையறுக்கப்பட்டுள்ளது.

தரம் 11,10,9 வகுப்புக்களுக்கு-100 மாணவர்களுக்கும்
தரம் 6,7,8 வகுப்புக்களுக்கு-60 மாணவர்களுக்கும் மட்டுமே அனுமதி வழங்கப்படும்.
அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள். (68841)

## கண்ணீர் அஞ்சலி

யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
இசை ஆசிரியை திருமதி
ம.சிவயோகநாதன் அவர்களின்
அன்புத் தாயார்

**திருமதி**
**அன்னப்பிள்ளை நடேசன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இசை ஆசிரியர் கழகம்,
யாழ். கல்வி வலயம்.
(68839)



பொன்னாலை
திருவருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## வைகுண்ட ஏகாதசி
## திவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம்

கார்த்திகை 26ஆம் நாள் (12.12.2007) புதன்கிழமை முற்பகல் 10.15 மணிக்கு
**கொடியேற்றம்**

மார்கழி 4ஆம் நாள் (20.12.2007) வியாழக்கிழமை
**வைகுண்ட ஏகாதசி தினம்**

அதிகாலை 3 மணிக்கு சங்காபிஷேகம்
காலை 6 மணிக்கு சொர்கவாசல் தரிசனம்
முற்பகல் 10 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை
முற்பகல் 11 மணிக்கு இரதோற்சவம்
இரவு வைகுண்ட ஏகாதசி புராணபடனமும் பஜனையும் நிகழும்

மார்கழி 5ஆம் நாள் (21.12.2007) வெள்ளிக்கிழமை
காலை 9 மணிக்கு திருவடிநிலைக்குப் புறப்படல்
முற்பகல் 11 மணிக்கு தீர்த்தோற்சவம்

வருடாந்த மார்கழிமாதப் பஜனை ஊர்வலம் 14.01.2008 ஞாயிறு காலை 8 மணிக்கு தேவஸ்தானத்தில் இருந்து ஆரம்பமாகி மாவடி வீதியூடாக மதியம் சித்தங்கேணி பிள்ளையார் கோயிலை அடைந்து சுழிபுரம் வீதியூடாக மாலை 6 மணிக்கு கோயிலையடையும்.

**தினமும் காலை 9மணிக்கு பகல் திருவிழா ஆரம்பமாகும்**
**மாலை 3 மணிக்கு இரவுத் திருவிழா ஆரம்பமாகும்**


பொன்னாலை,
சுழிபுரம்
(68803)

மகோற்சவ தேவஸ்தான பிரதமகுரு
"வேதாகம கிரியாபூஷணம்"
ஸ்ரீ விஸ்ணுஸ்ரீ க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்.
தேவஸ்தான பரிபாலன சபை




Colombo - 0112505633, 0112505632
Jaffna - 021 2226242
Chavakachchery- 021 2227979

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்தம்பி இராஜலிங்கம்**
(ரிங்கர் - பூச்சி) 10.12.2007

மலர்வு:15.06.1949 உதிர்வு:10.12.1999

பாசத்தின் உறைவிடமாய்
எங்களுடன் வாழ்ந்து மறைந்த
உங்கள் நினைவுகள் எக்கணமும்
எம்மை விட்டுப் பிரியாது.

ஸ்கூல் லேன்,
ஆறுகால் மடம். (68825)

பாசமுள்ள மைத்துனர்
வே. துரைரட்ணம் (துரை),
மகள் (மஞ்சு).

# மரண அறிவித்தல்

## செல்லையா பொன்னம்பலம்

[இளைப்பாறிய சிரேஷ்ட வரிமதிப்பாளர் (Senior Assessor)]



ஊரங்குணை, கட்டுவனைச் சேர்ந்த செல்லையா பொன்னம்பலம், இளைப்பாறிய சிரேஷ்ட வரிமதிப்பாளர் (Senior Assessor) 8/12/2007 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்லையா - சின்னாச்சிபிள்ளை தம்பதியரின் மகனும் இராசமலரின் அன்புக் கணவரும், இரத்தினம், அன்னலட்சுமி, காலஞ்சென்ற சுப்பையா, நாகமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகிழ்நங்கை (மருத்துவர்), செந்துரன் (B.Sc. Enigneer), பூங்கோதை (B.com) காலஞ்சென்ற வாசுகி, மணிமாறன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மதிமாறன் (மருத்துவர்), கோபிநாத் (Aeronautical Engineer) ஆகியோரின் அன்பு மாமனாரும், நடராசா சண்முகசுந்தரம், சண்முகலிங்கம் சண்முகராஜா, சண்முகரட்ணம் சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் (591,காலி வீதி, கல்கிசை) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக் கிரியைகள் இன்று (10.12.2007)திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் மீலாத் விழாவும் பரிசளிப்பு விழாவும் கல்லூரி மண்டபத்தில் அதிபர் வ.மகேந்திரராசா தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. இந்நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளுக்கு அதிபரும் ஆசிரியரும் பரிசில்கள் வழங்குவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:நேசன்)*

# நவம்பர் மாதத்திற்கான நலிவுற்றோர் நிவாரணம்; 14ஆம் திகதிக்குள் விநியோகிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.10

உலக உணவுத் திட்டத்தின் கீழ் நலிவுற்றோருக்கு வழங்கப்பட்டுவரும் நிவாரண விநியோகத்தில் நவம்பர் மாதத்திற்கான நிவாரணத்தை எதிர்வரும் 14ஆம் திகதிக்குள் விநியோகம் செய்து முடிக்குமாறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவுறுத்தியுள்ளார்.

நவம்பர் மாதம் தொடக்கம் மூன்று மாதங்களுக்கான நலிவுற்றோருக்கான பங்கீட்டு அட்டை மாவட்ட முகாமைத்துவப் பிரிவில் இருந்து சகல பிரதேச செயலகங்களுக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நவம்பர் மாத நான்கு வாரங்களுக்குமான உலக உணவுத் திட்ட நலிவுற்றோர் நிவாரண உணவுப் பொருள்களுக்கான வழங்கல் கட்டளைகள் மாவட்ட செயலக முகாமைத்துவ பிரிவிலிருந்து ப.நோ.கூ. சங்கங்ககளால் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளன.

அரிசி, மா, சீனி, பருப்பு, மரக்கறி எண்ணெய் ஆகிய சகல பொருள்களும் இம்முறை மேற்படி நிவாரண விநியோகத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

புங்குடுதீவு, நயினாதீவு, வேலணை ஊர்காவற்றுறை நெடுந்தீவு ஆகிய ப.நோ.கூ. சங்கங்களுக்கு 100 வீதம் சிவப்பு நாட்டரிசியும் ஏனைய ப.நோ.கூ. சங்கங்களுக்கு 50 வீதம் சிவப்பு நாட்டரிசியும் 50 வீதம் வெள்ளை அரிசியும் பயனாளிகளுக்கு வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி உலக உணவுத் திட்ட நிவாரண விநியோகத்தை உடனடியாக ஆரம்பித்து எதிர்வரும் 14ஆம் திகதிக்குள் முடிக்குமாறும் 18ஆம் திகதி முன்னேற்ற அறிக்கையினை சமர்ப்பிக்குமாறும் சகல ப.நோ.கூ. சங்கங்களுக்கும் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே உரிய பயாளிகள் 14ஆம் திகதிக்கு முன்னர் தமக்குரிய பொருள்களை உரிய கிளைகளிலிருந்து பெற்றுக்கொள்ளுமாறு திட்டப்பணிப்பாளர் மேலும் அறிவித்துள்ளார். (203)

## கல்வியியற் கல்லூரி அனுமதி; யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ,10

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2008 கல்வியாண்டுக்கு சித்திரம், ஆரம்பக் கல்வி,கணிதம்(தமிழ்மொழிமூலம்), விஞ்ஞானம்(தமிழ்மொழி மூலம்),நூலக விஞ்ஞானம் (ஆங்கில மொழி மூலம்) ஆகிய பாட நெறிகளுக்கு யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

பஸ்துன்ரட்ட கல்வியியற் கல்லூரியில் இருந்து நூலக விஞ்ஞானம்(ஆங்கில மொழி மூலம்) பாடநெறிக்கு அழைக்கப்பட்டவர்களும் இங்கு பரீட்சைக்குத் தோற்றலாம் என்று யாழ். தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்தார். (202)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,டிசெ.10

அராலிதெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் விழாவை முன்னிட்டு நடத்தும் 11 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* இளவாலை சென்.ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் எதிர் அராலி துணவி சென். ஸ்ரார் விளையாட்டுக் கழகம்.
* மானிப்பாய் றெட்றேஞ்சர் விளையாட்டுக் கழகம் எதிர் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம்.
* யாழ்ப்பாணம் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஆனைக்கோட்டை யுத் யூனியன் விளையாட்டுக் கழகம். (203-86)

## பளைப் பிரதேசசபை ஊழியர் வேலை இழக்கும் நிலையில்

யாழ்ப்பாணம்,டிசெ.10

ஏ9 வீதி மூடப்பட்டதால் யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள பளைப் பிரதேச சபையின் ஒன்பது ஊழியர்கள் வேலை இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

உடனடியாக வந்து கடமைகளைப் பொறுப்பேற்குமாறும் தவறின் தாமாகவே பதவியை விட்டு விலகியவராகக் கருதப்படுவீர் எனவும் பிரதேச சபைச் செயலாளர் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய நாட்டு நிலைமையைக் கருத்திற்கொண்டு தங்களது அறிவித்தலை மீள் பரிசீலனை செய்யுமாறு பாதிக்கப்பட்ட ஊழியர்கள் பிரதேச சபை செயலாளரைக் கோரியுள்ளதாகவும் தெரிவித்தார். (203-207)

# தென்மராட்சி மேட்டுநிலங்களில் நிலக்கடலை பயிரிடுவதற்கு உள்ளீடுகள் இலவசம்

யாழ்ப்பாணம், டிசெ,10

தென்மராட்சிப் பகுதியில் மீசாலை புத்தூர்ச் சந்தியிலுள்ள கமநல சேவை நிலையம் ஊடாக பொதுமக்கள் பயிரிட நிலக்கடலை வழங்கப்பட்டுள்ளது. விவசாய சம்மேளனங்களால் தெரிவுசெய்யப்பட்ட பொதுமக்களுக்கே நிலக்கடலை கமநல சேவை நிலைய கமநல விரிவாக்க போதனாசிரியர் சு. விஜயகுமாரால் வழங்கப்பட்டது.

விவசாய சம்மேளனங்களுக்கூடாக மேட்டுநிலக் காணிகள் கொண்ட பொதுமக்கள் தெரிவுசெய்யப்பட்டு நிலக் கடலை வழங்கப்பட்டுள்ளது.

நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளல் தொடர்பான விரிவுரைகளும் பகுதி பகுதியாக விவசாய போதனாசிரியர் சு. விஜயகுமாரால் நடத்தப்பட்டது.

பொதுமக்கள் பயிரிடக்கூடிய மட்டுப்படுத்தப்பட்ட நிலக் கடலையும் அதற்கான உரங்களான அடிக் கட்டுப் பசளை உட்பட யூரியா, ரி.டி.எம். என்பனவும் இலவசமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

இவற்றைப் பெற்றுக் கொண்ட பொதுமக்கள் நிலக் கடலையை பயிரிடத் தொடங்கியுள்ளனர்.

நிலக்கடலைச் செய்கை பண்ண வழங்கப்பட்ட நிலக்கடலை புதிய இனம் எனவும் இது மூன்றரை மாத கால பயிரினம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

நிலக்கடலை பயிரிடுபவர்கள், மழை பெய்யாது விட்டால் தண்ணீர் பாய்ச்சக் கூடிய முறையில் பயிரிடுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(203-231)

# செஞ்சிலுவைச் சங்கத்தின் மருத்துவ சேவை

குருநகர்,டிசெ,10

யாழ். பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ளோர் மற்றும் மண்டைதீவு, புங்குடுதீவு ஆகிய இடங்களில் உள்ள நோயாளர்கள் ஆகியோருக்கான மருத்துவ சேவைகளை இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறது.

மண்டைதீவுப் பகுதியில் கடந்த நவம்பர் மாதத்தில் நான்கு தடவைகள் மேற்கொள்ளப்பட்ட இம்மருத்துவ சேவையில் 264 நோயாளர்கள் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களுக்கு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.

புங்குடுதீவில் கடந்த நவம்பர் மாதத்தில் ஆறு தடவைகள் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ சேவையில் 688 நோயாளர்கள் பரிசோதிக்கப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டதாகவும் சங்கக் கிளையின் நிறைவேற்று அதிகாரி சி.குகராஜன் தெரிவித்துள்ளார்.

(203-51)

# மனித உரிமைகள் தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

வலி.வடக்கு டிசெ,10

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களின் விவரங்கள் வருமாறு:

பிரிவு 01: வி. லாவண்யா(கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), க. செந்துஜா (பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி), க. கமலேஸ்வரன் சோபிகா (வரணி மகாவித்தியாலயம்).

பிரிவு 02: புருசோத்தமகுரு இராஜராம் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), சண்முகராசா தீபிகா (புற்றளை மகாவித்தியாலயம்), செபமாலை சஜீவன் (நெடுந்தீவு மகாவித்தியாலயம்).

பிரிவு 03: வி. கௌதமன் (சென் ஜோன்ஸ் கல்லூரி),பு. சிந்துஜா(ஊர்காவற்றுறை கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் பாடசாலை), சி. நிரோசன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி). (203-86)

## நிகழ்வுகள்

குருநகர்,டிசெ.10

வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலை மணிவிழா இன்று திங்கட்கிழமை மு.ப. 10.30 மணிக்கு வைத்தியசாலையின் தாய்-சேய் நலன் பேண் நிலையத்தில் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் கா.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பிரதி மர்காண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன், வலி. மேற்கு பிரதேச செயலர் திருமதி தே. பாபு ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், வலி.மேற்கு பிரதேச செயலக திட்டமிடல் பிரிவு இணைப்பாளர் ப. ரவீந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (203-51)

* * *

நெல்லியடி,டிசெ.10

கரவெட்டி, மருதங்கேணி கல்விக் கோட்டங்களுக்கான பரிகாரக் கற்பித்தல் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இப் பரிகாரக் கற்பித்தல் 14 தினங்கள் தொடர்ந்து நடைபெறும் என்று வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார்.

60 ஆசிரியர்கள் பங்குபற்றும் இந்நிகழ்வுக்கான நிதி உதவியை ஜி.ரி.இசற் நிறுவனம் வடமாகாண கல்வித் திணைக்களத்திற்கு மையளித்துள்ளது. (202-115)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.10

சாரணர் தலைவர், குருளைச் சாரணர் தலைவர்களுக்கான பயிற்சிநெறி கைதடி நவீல்ட் பாடசாலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகிறது.

இன்று திங்கட்கிழமை வரை பயிற்சிகள் நடைபெறவுள்ளன. இதில் சாரணத் தலைவர்கள் நியமன ஆணைப் பத்திரங்களை 2008 ஆம் ஆண்டிற்குப் புதுப்பிப்பதற்கென வழங்குமாறு சாரணிய உதவி மாவட்ட ஆணையாளர் இ.தவகோபால் கேட்டுள்ளார். (203)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.10

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி யாழ். மாவட்ட செயலகத்தினால் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணேஸ் தலைமையில் இக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக் குழு இணைப்பாளர் எ.சிவராஜலிங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் மனித உரிமைகள் தொடர்பாகக் கட்டுரைகளை சமர்ப்பிக்கவுள்ளார்கள்.

மறு மதிப்பீட்டுரையை யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் அ. சிவசுவாமி நிகழ்த்துவார். (1-68)




## சாவகச்சேரி மருத்துவமனையில் தொலைபேசி உள்ளிணைப்பு இல்லை

யாழ்ப்பாணம்,டிசெ.10

சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனை விடுதிகளுக்கு இதுவரை தொலைபேசி உள் இணைப்புக்கள் வழங்கப்படாததால் நோயாளர்கள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

மருத்துவமனையின் மகப்பேற்று விடுதி, ஆண்கள் விடுதி ஆகியவை வெளிநோயாளர் பிரிவிவிலிருந்து 200 மீற்றருக்கு அப்பால் உள்ளதால் விடுதிகளில் நோயாளர்களுக்கு அவசர சிகிச்சை வழங்க வேண்டுமாயின் அங்கு கடமையாற்றும் ஊழியர் வெளி நோயாளர் பிரிவுக்குச் சென்று மருத்துவரை அழைத்து வரவேண்டி ஏற்படுகிறது.

மருத்துவமனைக்கு தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்ட போதிலும் இதுவரை விடுதிகளுக்கு உள்ளக இணைப்பு வழங்கப்படாதது குறித்து நோயாளர்கள் கவலை தெரிவித்தனர். (203-201)

## போதிய மழை பெய்யவில்லை; தென்மராட்சி விவசாயிகள் கவலை

யாழ்ப்பாணம்,டிசெ.10

தென்மராட்சிப் பிரதேசத்தில் இவ்வருடம் போதிய மழை பெய்யாததால் நெற்பயிர்கள் கருகும் நிலையில் உள்ளதாக நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நெல்வயல்களில் தண்ணீர் இல்லாமையால் பயிர்கள் வாடுவதாகவும் பத்து நாள்களுக்குள் போதிய மழை பெய்யாவிடில் நெற்பயிர்கள் அழிந்துபோகும் நிலையில் உள்ளதாகவும் தெரிவித்தனர்.

தண்ணீர் இல்லாததால் பெரும்பாலான வயல்களில் களை பிடுங்கல் இன்னும் தொடங்கவில்லை எனவும் தெரிவித்தனர். (203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

940 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கடகம் **14 17 21 53**

**07-12-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 5357562 - 5372728

ஜக்பொட் பரிசு ரூபா. 3,263,200/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 330,585 | 10/- | 3,305,850/- |
| 2 இலக்கங்கள் | 30,463 | 20/- | 609,260/- |
| 1 இல. + லக்கினம் | 30,243 | 30/- | 907,290/- |
| 2 இல. + லக்கினம் | 2,724 | 100/- | 272,400/- |
| 3 இலக்கங்கள் | 823 | 500/- | 411,500/- |
| 3 இல. + லக்கினம் | 67 | 5,000/- | 335,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 100,000/- | 200,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 3,263,200/- | 3,263,200/- |
| மொத்தம் | | | 9,304,500/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 394,913 | | 10,328,800/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இலக்கம் 4484044 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 டிசெம்பர் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 5364915-1-24 |
| மாத்தளை | 5363546-8-27 |
| கம்பஹா | 5369589-6-08 |
| மொனராகலை | 5360650-2-32 |
| நுவரெலியா | 5368686-4-86 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03



S.L.T வழிகாட்டல் கருத்தரங்கு

புதிய பிரிவு ஆரம்பமாகிறது

செவ்வாய் 9 மணிதொடக்கம் 1 மணிவரை
11ஆம் திகதியில் இருந்து 20 ஆம் திகதிவரை
தொடர்ச்சியாக நடைபெறும்.

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு
(யாழ்.போதனாவைத்தியசாலை முன்பாக)



**கோழிக்குஞ்சு விநியோகம்**

PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 10.12.2007 மாலை விநியோகிக் கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

**றாஜீவ்,**

நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (68634)



**NATIONAL COOLERS**
**நஷனல் கூலர்ஸ்**

குளிர்சாதனப் பெட்டி, A.C உங்கள் இருப்பிடத்திற்கு வந்து சிறந்த முறையில் பழுது பார்த்து கொடுக் கப்படும்.

தொடர்பு: ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்
(சிவன்கோவில் முன்பாக)
0776134790 (68746)



**DISSERTATION BINDING**

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைவாகக் கட்டிக் கொடுக் கப்படும். இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் 850/=

BHARATHI PATHIPPAKAM
OFF - SET PRINTERS
430, K.K.S Road Jaffna
Phone: 021 222 3081


## முன்பள்ளி மாணவருக்கு இலவசமாகச் சத்துணவு

சுழிபுரம், டிசெ.10

வலிகாமம் மேற்குப் பிரிவிலுள்ள முன்பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது.

பிரதேச செயலகம் ஊடாக இந்த பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிறுவர் முன்பள்ளி ஆசிரியர்கள் தினமும் பாடசாலை நடைபெறும் நாள்களில் உணவை தயாரித்து வழங்கி வருகின்றனர். (203-28)

## விவசாயிகள் கௌரவிப்பு

கீரிமலை கமநலசேவை நிலையப் பிரிவில் இவ்வருடம் சிறந்த விவசாயிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களை கௌரவிக்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. இதில் ஒன்பது விவசாயிகள் சான்றிதழ் வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டனர்.

மாகியப்பிட்டியிலுள்ள நிலைய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட உதவி விவசாயபணிப்பாளர் கி.சிறிபாலசுந்தரம், சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம், கீரிமலை கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி சா.குகனேசன், கமநலசேவை நிலைய குழுத்தலைவர் ந.கமலநாதன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## பட்டம் விடும் 'சீசன்' ஆரம்பம்

வடமராட்சிப் பிரதேசத்தில் பட்டம் விடும் 'சீசன்' ஆரம்பமாகியுள்ளது.

சிறுவர்கள் பட்டம் விடுவதில் ஆர்வம்காட்டிவருவதை ஆங்காங்கேகாணக் கூடியதாக இருக்கிறது. நவம்பர் மாதத்தில் ஆரம்பமாகும் பட்டம் விடும் சீசன் தைப்பொங்கல் தினத்துடன் நிறைவடைவது வழக்கமாகும். (203-160)

# அன்பான வேண்டுகோள்

எமது அன்பான வாடிக்கையாளர்களே, நண்பர்களே, அன்பர்களே! எமது நிறுவனம் எதிர்பாராத துரதிஸ்டவிதமாக 01.12.2007 சனிக்கிழமை இரவு தீயினால் எரிந்து கருகிச் சாம்பலாகிவிட்டது. நாம் மிகவும் வேதனையில் உள்ளோம். ஆகவே எமது வாடிக்கையாளர்களாகிய நீங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளும்படியும், மிகக் குறுகிய காலத்தில் மீண்டும் அதே இடத்தில் எமது நிறுவனம் இயங்கும் என்பதையும் உங்களது கொடுக்கல், வாங்கல்களை நாங்கள் தொடர்ந்து செய்வோம் எனவும் உறுதியளிக்கின்றோம். தேவைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

*"நாம் உதிரவில்லை உடைந்து போயுள்ளோம்"*
*"உங்கள் ஆதரவே எங்களின் பலம்"*

**அவசர அழைப்புக்கு:- 021 - 222 7985**

நிர்வாகம்,

உரிமையாளரும், ஊழியர்களும்.

★ *தீயை அணைக்கும் முயற்சியில் தீயுடன் போராடிய எனது ஊழியர்களுக்கும் அவர்களுடன் இணைந்து போராடிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் என் இதயம் உருகிய நன்றிகள்.*

நிஷானந்தா ஜுவெல்லறி,
75 (121), கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்புடன் A.ஆனந்தன்
(உரிமையாளர்).

(68745)

# மரண அறிவித்தல்

## திருமதி மீனாம்பாள் செல்வத்துரை



யாழ்ப்பாணம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வாழ்விடமாகவும்கொண்டு கனடாவில் வசித்து வந்த திருமதி மீனாம்பாள் செல்வத்துரை அவர்கள் 05.10.2007 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற கொத்தணி அதிபர் சரவணமுத்து செல்வத்துரையின் மனைவியும், புங்குடுதீவு காலஞ்சென்ற ஆசிரியர் குணமாலை நாகலிங்கம் - பாக்கியம் தம்பதியரின் மூத்த மகளும் நயினாதீவு காலஞ்சென்ற உடையார் சரவணமுத்து - முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் கலாயினி, கலாதரன், பிரபாலினி, கிருபாலினி, பிரபாகரன் ஆகியோரின் தாயும் சிவகுமார், பத்மினி, சிவாசீலன், கிருபாகரன், சிவசங்கரி ஆகியோரின் மாமியும் ஆதித்தியன், சாயகி, சேயோன், ஆத்மன், அர்ச்சயன், திலீபன், சரவணன், ஆதிரை, ஆர்த்தி, மாதுமை ஆகியோரின் பேர்த்தியும் காலஞ் சென்ற கணேசபிள்ளை மற்றும் தனலட்சுமி, நகுலேசபிள்ளை, கனகலெட்சுமி, ராசலெட்சுமி, முருகபூபதி சந்திர சேகரம், தணிகாசலம், ஞானசேகரம், குலசேகரம், சிவசேகரம் ஆகியோ ரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.12.2007) திங்கட்கிழமை கனடா நேரப்படி காலை 9 மணி முதல் 11 மணிவரை இல. 375, Mount Pleasant Road இல் அமைந்துள்ள Mount Pleasant Cemetery இல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இன்று பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணிவரை அன்னாரின் யாழ்ப்பாண இல்லத்தில் துயர் பகிர்வு இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நேரடித் தொடர்புகளுக்கு
905 887 6358
416 318 7875
416 702 6792
131/1, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்
ச.கு. சரவணபவானந்தன் (பெறாமகன்)
சி. தில்லைநாதன் (மைத்துனர்).

(68828)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 17★02★1951

உதிர்வு 11★11★2007

## அமரர் சிவகுரு உமாகாந்தன்

(வணிகமாணி (சிறப்பு) முதுமாணி கணக்கியல் தொழில் நுட்பவியலாளர், பட்டப்பின் பொது முகாமைத்துவம் - முன்னாள் யாழ் தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளரும், தற்போதைய யாழ் உயர் தொழில் நுட்பவியல் நிறுவன - சிரேஷ்ட விரிவுரையாளரும்)

M.A.(Jaffna), B.Com(Hon) (Vid) Dip.in Pub.Ad. (Jaffna) SLTES - I

**ஆளாகும் வரை அருகிருப்போம் என்றுவிட்டு**
**ஆளாகும் முன்னமே அடுத்தடுத்து சென்றது ஏனோ?**
**எங்களின் பொற்காலம் முடிந்தது ஏனோ?**
**அக்காலம் மீண்டும் எம்வாழ்வில் வாராதோ?**

*எமது அன்புத் தந்தை 11.11.2007இல் இறைபதமடைந்த செய்தி கேட்டு வருகைதந்து சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்கள், தொலைபேசி, தொலைநகல்கள், தந்திகள், பத்திரிகையிலான அனுதாபச் செய்திகள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்கள், யாழ்.உயர் தொழிநுட்பவியல் நிறுவனத்தினர், தமது நிறுவனத்தில் அஞ்சலி நிகழ்வுக்குக் கொண்டு செல்வதற்கும் அது சம்பந்தமான சகல ஒழுக்குகளையும் மேற்கொண்டவர்கள், அஞ்சலி உரை நிகழ்த்தியவர்கள், ஆறுதல் செய்திகள் அனுப்பியவர்கள், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*நாளை (11.12.2007) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் காலை 9 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*76, ஆ.வ.வீதி,*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*

**பிள்ளைகள்.**

# MUNICIPAL COUNCIL JAFFNA
# QUOTATION NOTICE

Tenders are called for the following items by the Jaffna Municipal Council.

This Tenders will be prepared by you, containing the following details and sent before 14.12.2007. by Registered Post to The Commissioner, Municipal Council, Jaffna.

**01 No. Submersible bore hole Water Pump with accessories.**
Submersible Water Pump with motor with submersible cable with kit and all necessary .. fittings.

| | |
|---|---|
| Make | Specify Make |
| Brand | Specify |
| Capacity | 70 m3/ hr |
| Total Head | 60m |
| Speed | 2830 rpm |
| No. of Stages | 4 |
| Maxirrium Dia. | 187 mm |
| Motor Rating | 22.4 KW |
| Voltage | 400 V, 3 Phase, 50 Hz |
| Discharge Dia. | 4" |
| Motor Outlet Cable | 10 m |

**2.Supply of Trailer Mounted Water Bowser of 4500 Ltr. Capacity.**

a) Tank made out of 3mm thick stainless steel AISI 304 quality with 450mm dia. Manhole at the top. 50mm dia. Gate valve made out of brass for delivery with base plate made out of 1/8" thick stainless steel mounted on standard chassis with provision for mounting Water Pump, 50mm dia, 3m long AISI 304 quality schedule 40 stainless steel pipe, 1 m long, 20mm dia. AISI 304 quality schedule 40 stainless steel pipe, 20mm dia. 02 Nos. brass taps and Hose connector of 50mm dia. Made out of brass.

b) Provide a Water Pump, EY 20, Jinasena model - 2HP and 50mm inlet & outlet fixed to the bowser with necessary accessories.

c) Chassis made out of M.S. channel iron (150 x 75 x 6)mm as per plan, (50x50)mm axile (7.50x16) rim with Tyre & Tubes and connecting devices. Work completed with the application of two coats of Anticorrosive paint & two coats of enamel white.

**3. Supply of Electric centrifugal Motor - 01 No.**
3 Phase, 2HP, 50mm inlet & outlet with necessary accessories - Jinasena or equivalent.

**4.Supply of Plastic Tank, 1000 ltr. Capacity - 01 No.**
Arpico or equivalent.

**5. Supply of Steel stand.**
Steel stand for establishing plastic tank made out of (1 ½ x 1½x¼)" Angle iron (4 x 4 x 2)' size strengthen with ½" dia. M.S. Rod sides & top and covered by ¾ thick margosa timber Planks.

Work completed with the application of two coats of Anticorrosive paint & two coats of Enamel white.

Note:- The Rate included for Fabrication and transport to the Municipal Council Premises.

**M.S.Saravanabava**
Municipal Commissioner
Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு மனிதனும் தனது உரிமைகளை அறிந்தும் உணர்ந்தும் கொள்வது அவசியம்

இந்த நவீன உலகில் இன்று பரவலாக பேசப்படும் கருப்பொருள் மனித உரிமை என்ற பதமாகும். விஞ்ஞான விந்தையால் விரிந்து பரந்துபட்ட இந்த நவீன உலகில் மனித உரிமைகள் என்ற பதம் மட்டும் மேலோங்கி நிற்கின்ற காரணம் என்ன? இன, மத, மொழி, பால் நிறவேறுபாடுகள் இன்றி உலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் மகத்துவம் மிக்க மனிதர்களே என்ற அற்புதமான கருத்து அகிலமெங்கும் பரவுவதன் மூலமே வேறுபாடுகள் களையப்படும். மனித உரிமைகள் பற்றி நாம் சற்று ஆராய்ந்து பார்க்கும்போது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த அற்புதமான - அதேவேளை ஆழமான சொல் பாவிக்கப்பட்டு வந்திருக்கின்றது என்பது வெளிப்படை.

சர்வதேச மனித உரிமைகள் தினம் வருடாவருடம் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. உலக நாடுகள் எல்லாம் இத்தினத்தை ஒரு புனித தினமாகவே கொண்டாடுகின்றன. மனித உரிமைகள் பற்றி அறிந்திருக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாகும் ''தனி ஒருவருக்கு உணவு இல்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்'' என பாட்டுக்கொரு புலவன் பாரதி புரட்சிக் கவிதை படைத்தான். இதன் மூலம் தனி ஒருவனுக்கு எல்லா உரிமையும் கிடைத்திட வேண்டும் என பாரதி எடுத்தியம்பியுள்ளார்.

இம்மண்ணில் பிறந்த ஒவ்வொருக்கும் குடியியல் உரிமை, அரசியல் உரிமை என இருவகை உரிமைகள் பிறப்பிலேயே தரப்பட்டுள்ளது இது மறுக்கவோ, மறக்கவோ, மறைக்கவோ முடியாத புனிதமான உண்மையாகும். உரிமைகள் மீறப்படும் போது ஆர்ப்பரித்து எழுகின்ற சமுதாயக் குரல்கள் மூலம் மானிடத்தின் மாண்புமிகு தன்மையை நாம் புரிந்துகொள்ள முடியும்.

நாடுகள் அழிந்தன. காலச் சுழற்சியில் சாம்ராஜ்யங்கள் தரைமட்டமாகின. ஆழிப் பேரலைகள் போன்ற துன்பியல் நிகழ்வுகளால் பூகம்பங்கள் போன்ற பூமித்தாயின் கோரத்தாண்டவத்தால் கோடிக்கணக்கான மக்கள் அழிந்தனர். ஆனால் மானுடம் பற்றி பேசும் மகத்தான மனித சமுதாயத்திற்கு உரித்தான அடிப்படை உரிமைகள் பற்றிய எழுச்சிகளை எவராலும் அழிக்கமுடியவில்லை. வீழ்ச்சிடையடைந்த சாம்ராஜ்சியங்களிலும் கூட எழுச்சியடைந்த மனித உரிமைக் குரல் கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றது?

### மனித உரிமை சாசனம் அங்கீகரித்த உரிமைகள்

மனிதர்கள் ஒவ்வொருவரும் உயிர் வாழும் உரிமை உலகில் தனிநபர் சுதந்திரம், பாதுகாப்பு, அந்தரங்கம் பேணல், கொடுமைகளில் இருந்து விடுதலை, மனிதாபிமானமற்ற இழிவுபடுத்தும் நடவடிக்கைகள், சித்திரவதை, அடிமைப் படுத்துதல் என்பனவற்றிலிருந்து சுதந்திரம், காரணமற்ற முறையில் கைதுசெய்யப்படாமை, நீதிமுறையான விசாரணை, சட்டத்தின் முன் மனிதாராக கணிக்கப்படுதல், சிந்தனை சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம், சமய சுதந்திரம், அபிப்பிராயக் கருத்து வெளியீட்டுச் சுதந்திரம், நாட்டைவிட்டு வெளியேறும் உரிமை உட்பட நாட்டின் எப்பகுதிக்கும் செல்லும் உரிமை, அமைதியாக ஒன்றுகூடுவதற்கும் சங்கங்களை அமைப்பதற்கான உரிமை என்பனவற்றை மனித உரிமைகள் சாசனம் அங்கீகரிக்கின்றது.

**சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று**

குடியியல் அரசியல் உடன்பாட்டு ஒப்பந்தத்தின்கீழ் குறித்த சூழ்நிலைகளுக்கு உட்பட்ட தனிப்பட்டோர் ஒப்பந்தத்தை ஏற்றுள்ள அரசுகளினால் மனித உரிமைகள் மீறப்படுதல் பற்றிய முறைப்பாடுகளை தாக்கல் செய்ய முடியும்.

குடியியல் அரசியல் உடன்பாட்டு ஒப்பந்தத்தின் விருப்பத்தெரிவுக்குரிய பின்னேட்டின் கீழ் அரசுகள் மரண தண்டனையை ஒழிப்பதற்கான அனைத்து நட வடிக்கைகளையும் எடுக்கவேண்டும்.

மனித உரிமைகள் பிரகனடம் ஏறத்தாழ அனைத்துலக ரீதியில் அரசாங்கங்கள் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலான தமது முன்னேற்றத்தை அளவிடுவதற்கான ஓர் அளவுகோலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### சர்வதேச மனித உரிமை ஆவணங்கள்

மனிதஉரிமை பிரகடனத்திற்கான தேசிய யாப்புகள் பற்றி ஆராயும் போது ஐரோப்பிய சமவாயக் கழகம் (1950), ஜப்பானிய அமைதி பொருத்தனை(1951), ஆபிரிக்க ஐக்கிய ஒழுங்கமைப்பின் யாப்பு(1963), ஐரோப்பிய பாதுகாப்புக்கும் ஒத்துழைப்புக்குமான மாநாடு(1975), கெல்சிங்கியில் 35 நாடுகள் கைச்சாத்திட்ட இறுதி ஆவணம் என்பன உட்பட சர்வதேச ஆவணங்கள் அனைத்திலும் மனித உரிமைகள் சாசனம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனித உரிமைகள் பிரகடனமானது ஒழுக்க அதிகாரத்துடன் கூடிய ஒரு விஞ்ஞாபனமாகும்

மனிதன் ஒரு சமூக விலங்கு எனக் கருதப்படுகிறான். சமூதாயத்தில் அவன் உறுப்பினன், உற்பத்தியாளன், ஒரு குடும்ப அங்கத்தவன் என்று பல வேடங்களைத் தாங்கும் மனிதன், சமூதாயப் பாதுகாப்புக்கு உட்பட்டவனாகவே இருக்கிறான்.

### உரிமைகளை மனிதன் உணர வேண்டும்

'மனிதன் சமூகத்தில் தனக்கு உரிமைகள் உண்டு என்று உணரவேண்டும். உரிமைகள் வரையறை செய்யப்பட வேண்டும். மனிதன் தன் உரிமைகளைப் பெற்று வாழ்கின்ற போது வாழ்க்கை வழமுள்ளதாகின்றது, வனப்புள்ளதாகின்றது, அத்தோடு அர்த்தமுள்ளதாகின்றது. மனித சமூகம் அடிமைத்தனத்தில் இருந்து விடுபூடுவதற்காக காலம் காலமாக பலவித செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்ததை வரலாறு எமக்குப் பாடமாகத் தந்திருக்கிறது. எவரும் அடிமைப்படுத்தப்படுவதையோ அல்லது கொடூர தண்டனை அடைவதையோ சமூகம் ஏற்கமாட்டாது. அது மனித உரிமையைப் பறிக்கும் செயலாகும்.

பின்வரும் உரிமைகள் மனிதனுக்கு இறைவனால் வழங்கப்பட்ட வரப்பிரசாதம் ஆகும். இவையே இலங்கை அரசியல் யாப்பின் அடிப்படை உரிமைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன

1) மனச்சாட்சியின்படி வாழும் சுதந்திரம்.
2) சிந்திக்கும் சுதந்திரம் (10 பிரிவு)
3) அமானுஸ்ய சித்திரவதைகளில் இருந்து மீளும் உரிமை
4) குரூர, அவமதிப்புக்கு உள்ளாகாமல் இருக்க உரிமை (11 பிரிவு)
5) சட்டத்தின் முன்னிலையில் சமமான, பாதுகாப்பு பெற உரிமை (12 பிரிவு)
6) சட்டத்திற்கு அப்பால் மரண தண்டனை, சிறைத்தண்டனை பெறாமல் இருப்பதற்கு உரிமை
7) சட்டத்தினால் குற்றவாளி என நிரூபிக்கும் வரை சுற்றவாளி என ஊகிப்பதற்கான உரிமை (13 பிரிவு)
8) சகல பிரஜைகளுக்கும் பேசும், கருத்துத் தெரிவிக்கும் உரிமை (13 பிரிவு)
9) அமைதியாக ஒன்று கூடும் உரிமை
10) தொழிற்சங்கம் ஸ்தாபிக்க, இதில் இணைய உரிமை
11) தமது மதத்தை கற்க, பயன்படுத்த உரிமை

சம்பந்தர் சிவராஜசிங்கம்
பிராந்திய இணைப்பாளர்,
இ.ம.உ. ஆணைக் குழு,
யாழ்ப்பாணம்.

12) தனியாக அல்லது கூட்டாக கலாசாரம், மொழி பாவிக்கும் உரிமை
13) வெளிநாடு சென்று இலங்கை வர உரிமை (14 பிரிவு)
14) இந்த உரிமைகள் அதிக ாரமிக்கவராலோ அல்லது நிர்வாகத்தாலோ மீறப்பட்டால் அது உரிமை மீறலாகும். (15 பிரிவு)
15) எழுத்தாலான சட்டம், எழுத்தில் இல்லா சட்டம் இவை அணைத்தும் சட்டமே (16 பிரிவு)
16) அடிப்படை உரிமை மீறப்பட்டாலும், மீறப்படப் போகின்ற சந்தர்ப்பத்திலும் 126 ஆம் பிரிவின்படி உயர் நீதிமன்றத்தில் உதவி பெறலாம். (17 பிரிவு)

### மனித உரிமை ஆணைக்குழு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க சட்டத்தின்படி ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு உயர் நீதிமன்றத்திற்கு அடுத்ததாக உள்ள ஒரேயொரு ஆணைக் குழுவாகும்.

மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது மனித உரிமைகள் ஆணைக் குழுவின் மிகத் தெளிவான நோக்கமாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தங்களால் ஆன தங்களின் சக்திக்கு உட்பட்ட சகல முயற்சிகளையும் மேற்கொள்ளுகின்றனர் என்பதை நாம் மிகவும் தெளிவாகவும் உறுதியுடனும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

மனித உரிமைகள் நிலைக்க யாவரும் ஒன்றுபட்டுப் பாடுபடுவோம். இதுவே இன்றைய தினத்தின் மிகப்பெரிய செய்தியாக இருக்கும் என நம்புகின்றோம்.

# நம்பிக்கை என்னும் கவசமிருந்தால் வேதனையும் துன்பமும் நம்மை அணுகா

**மகராஜி என்ற கௌரவப் பெயரால் அழைக்கப்படும் பிறேம் ரவாட்டின் ஐம்பதாவது பிறந்த நாள் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**



வாழ்க்கை என்பது எப்போதும் நாம் எதிர்பார்ப்பது போல் இருப் பதில்லை. நமக்கு சுபீட்சம் வேண்டும், அமைதி வேண்டும், நிலையான நிம்மதி வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். ஆயி னும் இவற்றை நாம் தேடுகையில் பெரும்பாலும் நம்பிக்கையற்ற நிலையும் விரக்தியும் தான் மிஞ்சுகின்றன. மேலும் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்காக நாம் தேடுவதைக் கைவிடுகின்றோம்.

உள் அமைதியைப் பற்றியும் நிறைவைப் பற்றியும் மக்களிடம் உரையாற்றுவதிலேயே மகராஜி தன் வாழ்க்கையின் பெரும் பகுதியினைச் செலவிடுகிறார். அவர் மக்களிடம் 'நீங்கள் உங்கள் வாழ்கையில் ஒருபோதும் நம்பிக்கை இழந்துவிடவேண்டாம்'' என்று வலியுறுத்துகின்றார்.

''நம்பிக்கை என்ற வார்த்தைக்கு அப்பால் ஏதோவென்று உள்ளது. உண்மைநிலை உங்களை அற்புதமாகச் சூழ்ந்திருக்கின் றது. அந்த உண்மை நிலைக்கு உள்ளம் திறந்திடுங்கள். நான் குறிப்பிடும் அந்த உண்மைநிலை ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் குடிகொண்டுள்ளது'' என்கிறார் - பிறேம் ராவட் எனும் இயற் பெயரைக் கொண்ட மகான் மகாராஜி.

அனைத்துலக ரீதியில் அவர் உரையாற்றும் எல்லா நிகழ்ச்சிகளிலும் மக்களிடம் அந்த உண்மை நிலையினைத் தேடுமாறு ஊக்கமளிக்கின்றார். அதனை அனுபவிக்க செயல்முறையான ஒரு வழியையும் காண்பித்துக் கொடுக்கின்றார்.

நான் உலகம் முழுவதும் பிரயாணம் செய்கின்றேன். தங்களை சுதந்திரமானவர்கள் எனக் கூறிக் கொள்ளும் மக்களைக் கண்டிருக்கின்றேன். ஆனால் அவர்களுக்குச் சுதந்திரம் கிடை யாது. அவர்கள் தங்கள் சொந்த கற்பனைகளிலும் எண்ணங்களி லும் சிறையுண்டு கிடக்கிறார்கள். நாம் சிக்கிக் கொள்ளும் அன் றாட விடயங்களுக்கு அப்பால் இந்த வாழ்க்கையில் அற்புதமான குறிக்கோள் ஒன்றுள்ளது.

இந்த உலகில் மக்கள் கொண்டுள்ள எதிர்பார்ப்புக்கள் பெருமளவு சிதைத்துபோய்விடுகின்றன. எதிர்பார்ப்புக்கள் என்னும் போது நீங்கள் எவ்வகையான அர்த்தத்தைக் கொண்டுள்ளீர்கள் என்பதைப் பொறுத்தது. ஒரு வகையான எதிர்பார்ப்பு உள்ளது. அது காலத்துக்குக் கட்டுப்படாதது. நிபந்தனைகளுக்கு உட்படாதது. அது தயார் நிலையில் காத்திருக்கும் ஓர் எதிர்பார்ப்பு

பாலைவனத்தில் இருக்கும் மலர்கள் எந்நேரமும் மழைக்காக காத்திருப்பதைப் போன்றது. அந்த மலர்கள் மழை வந்ததும் பசுமை தழைத்து குலுக்கக் காத்திருக்கின்றன. அவற்றுக்குத் தேவை மழை மட்டும்தான். அவை செழிப்பாக வளர்ச்சி காணும்.

நமக்கும் அதே நிலைதான். பாலைவனத்தில் மழைக்காகக் காத்திருக்கும் விதையைப் போன்று நம் ஒவ்வொருவர் உள்ளேயும் அமைதி பூத்துக் குலுங்கக் காத்திருக்கின்றது. அது வேற்றுமைகளைக் காண்பதில்லை நாம் செல்வந்தரா, ஏழையா, பருமனானவரா, ஒல்லியானவரா எந்த மதத்தை பின்பற்றுபவர் அல்லது எந்த நாட்டில் வாழ்பவர் என்பதைப் பற்றியொல்லாம் அக்கறை கொள்வதில்லை. அதன் அக்கைறையெல்லாம் தண்ணீரில் மேல் தான் இருக்கும். பாலைவத்தில் அந்தவொரு தக்க தருணத்துக்காக - சரியான சந்தர்ப்பத்துக்காக காத்துக்கிடக்கும் விதைகளைப் போன்றது. ''உங்களிடம் அனைத்தும் உள்ளன. அவற்றையெல்லாம் கண்டறிய நான் உங்களுக்கு உதவுகின்றேன். மேலும் நம்பிக்கை என்னும் கவசத்தைத் தூக்கி நிறுத்துகின்றேன் காரணம் இந்த உலகம் அதனைச் சீர்குலைத்து விட்டது'' என்கிறார் மகாராஜ்.

ஆம்! ஒருவரிடம் நம்பிக்கை இருக்கும் போது வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக்கொள்ளலாம். காரணம் இந்த உலகில் வேதனையிலும் துன்பத்திலும் இருக்கும் போது நம்பிக்கையைத் தான் நாம் முதலில் இழந்து விடுகின்றோம். ஆனால் நம்பிக்கை என்னும் கவசம் நம்மிடமிருந்தால் வேதனையும் துன்பமும் நம்மை அணுகாது.

நமது கவனத்தை உள்ளே திருப்பும் போது நம்பிக்கை பிறக்கும், அப்போது மீண்டும் புன்னகைக்கக் கற்றுக்கொள்ளலாம். நாம் துன்பப்படத் தேவையில்லை. துயரம் என்பது எப்போதும் இருக்கும் அது நீங்குவதில்லை. நாம் அனுபவிக்கக் கூடிய துயரம் யாவும் நம்முள்ளேதான் இருக்கின்றன. நாம் அனுபவிக்கக் கூடிய பேரன்பும் நம்முள்ளேதான் இருக்கிறது. நாம் எந்தக் கதவைத் திறக்க விரும்புகின்றோம் [illegible] துள்ளது. அதற்கான உதவியை வழங்க நான் தயாராக உள்ளேன் - என்பது அவரது உறுதிமொழி.

## சமயசந்திகளில்

யாழ்ப்பாணம்,டிசெ.10

இணுவில் சுந்தர ஆஞ்சநேயர் ஆலய இலட்சார்ச்சனைப் பெருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது. (203)

* * *

கோண்டாவிலில் அமைந்துள்ள சபரீச ஐயப்பன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை மாலை மஞ்சமாதா பூசை, விளக்குப் பூசை என்பன இடம்பெறும். நாளை செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறு நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

சாவகச்சேரி கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (203-207)

* * *

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 5மணிக்கு கும்பபூசையுடன்திருவெம்பாவைத் திருவிழா ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தினமும் காலை 5 மணிக்கு கும்ப பூசை 6.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வருவார். தினமும் திருவாதவூரடிகள் புராணம் ஓதப்படும்.

எதிர்வரும் 24ஆம் திகதி காலை 5 மணிக்கு நடேசரபிஷேகம் நடைபெற்று ஆலய பித்தர் கேணியில் தீர்தத்திருவிழா நடைபெறும். (203-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சமதை நெருடி நெக்குருக்கும்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம் மகிழ 05 . 01 . 1986



விண்ணகம் மகிழ 21 . 11 . 2006

### அமரர் தில்லைநடராஜா ரகுபரன்

(தலைவர், சத்தியசாயி சேவாநிலைய இளைஞர் பிரிவு)

திதி: பிரதமை (10.12.2007)

அம்மா, அம்மாவென்று நூறுமுறை யழைப்பாயே
அகமதிலுள்ள நோயதை யம்மாவுக்கு மறைத்தாயே
அறிவினைத் தேடி மவாவுட நியிருந்தாயே
அம்மாவு முன்தந்தையு மண்ணனும் கதறியழ
அகங்கார மமதையுடை காலனுனைப் பறித்தானோ?
அலறுகிறோம் நாமிங்கு எம்ரகுவே பெறுகநின் சாந்தி!

சாது நுடும்பக் குலச்செல்வம் இறையடி சேர்ந்த ஓராண்டாகிய இன்றைய நினைவுதினத்தில் அன்னாரின் ஆத்மா இறையடி சேர்ந்து அவனின் பாதாரவிந்தங்களில் நிலையான இன்பம் பெற்றுச் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

மயிலணி, சுன்னாகம்.

பிரிவால் ஏங்கித் தவிக்கும்: அப்பா, அம்மா, அண்ணன்.

(68682)


## பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

சுழிபுரம், டிசெ.10

சுழிபுரத்தில் உள்ள சமூக தொழில் நுட்பக்கல்வி நிலையத்தில் பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கு தொழிற் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

'போரூட்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் இலவசமாக இப்பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளன.

16 தொடக்கம் 30 வரையான வயதுடையவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

வானொலி, தொலைக்காட்சி சீர் செய்தல், வீட்டு மின் இணைப்பு, ஓட்டோ, மோட்டார் வாகனம் திருத்துதல், அலுமினியம் பொருத்துதல், மரவேலை போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

பயிற்சியை மேற்கொள்ள விரும்புவோரை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-28)

## தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய பரிசளிப்பு விழா

பருத்தித்துறை, டிசெ.10

பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற புலமைப்பரிசில் விழாவில் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 17 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன. இந்த 17 மாணவர்களுக்கும் இலங்கை வங்கியின் அறக்கொடைப் பத்திரங்களும் வங்கியால் வழங்கப்பட்டன.

புலமைப்பரிசில் விழா வித்தியாலய அதிபர் கே.யோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் ப.ஆனந்தநடேசன் விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்.

இம் மாணவர்களின் கல்விச் சாதனைகளிற்கு காரணமாகவிருந்த ஆசிரியர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

சட்டத்தரணி எஸ்.ரவீந்திரன், கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் எஸ்.புஸ்பராஜா, ஆசிரியை ஏ.யசோதராதேவி, திருமதி அனட் மக்கேல் ராஜ்குமார் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். (203-115)

## மேலும் 42 பேருக்கு மாதாந்த உதவிப்பணம்

வலி.தென்மேற்கு, டிசெ.10

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணக் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்த மேலும் 42 பேருக்கு கொடுப்பனவு வழங்க சமூக சேவை மற்றும் சமூக நலத்துறைத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

இதனை அடுத்து அவர்களுக்கான மார்கழி மாதத்திற்கான பொதுசன மாதாந்தக் கொடுப்பனவு தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கான பணம் பெறும் உத்தியோகபூர்வ அனுமதி அட்டையை சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை பிரிவில் இவர்கள் உடனடியாக நேரில் வந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பிரதேச செயலக சமூக சேவை அலுவலர் தெரிவித்துள்ளார். (203-135)


விண்ணக வாழ்விலே

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கஸ்பார் கிறிஸ்தோப்பர்

தோற்றம்: 05✱03✱1932 மறைவு: 09✱11✱2007

"கிறிஸ்து எனக்கு ஜீவன்
சாவு எனக்கு ஆதாயம்" - பிலிப்- 1:21

நீங்கள் எம்மைப் பிரிந்து
திங்கள் ஒன்று ஆனாலும்
தீராது எம் துயரம்- எம்
நினைவில் வாழ்வீர்கள் நிதமும்.

(54654)

இல.19/4, பூங்கா வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

ஆத்மா சாந்திபனை ப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 07 . 07 . 1941



ஆண்டவன் அடியில் 21 . 11 . 2006

### அமரர் தாமோதரம்பிள்ளை இராசரத்தினம்

(குழந்தை)

ஆண்டு ஒன்று ஆனதப்பா!
ஆறவில்லை எம் துயரம்
நீண்டதூரம் செல்வீர் என்று
நினைத்திருக்கவில்லை அப்பா!
கைபிடித்த மனைவி கதி ஏதுமின்றி
கண்கலங்கி நிற்பதைக் காணவில்லையா அப்பா!
உங்கள் அன்புச் செல்வ மகள்
உங்கள் அரவணைப்பு இன்றி ஆதரவிழந்து
அழுது புலம்புவது கேட்கவில்லையா- அப்பா?

"இலட்சுமி பவனம்",
அச்செழு, நீர்வேலி. (68742)

மனைவி- சித்திராதேவி, மகள்- தர்சிகா,
சகோதரர்கள், மருமக்கள்.

## 6 ஆம் மாத நினைவலைகள்

மண்மகிழ 04 . 11 . 1956

கண்நெகிழ 16 . 06 . 2007

எங்கோ பிறந்தோம்! எங்கோ வளர்ந்தோம்!
வாழ்க்கையில் இணைந்தோம்!!
ஆண்டுகள் பதினைந்து கூடி வாழ்ந்தோம்
வாழ்ந்த காலத்தில் வாழ்க்கை
நிலையாமை என்ற உலக
நியதியை சிந்தித்துப் பார்க்கவில்லை
உம்மை இழந்த பின்னரான
ஒவ்வொரு நாளும் எஞ்சிய
காலத்தை எப்படி வாழ்ந்து
முடிக்கப் போகிறேன் என்ற
அச்சத்துடன் நடைப்பிணமாக வாழ்கின்றேன்
உமது இழப்பை எனது
மரணம் ஒன்றே ஈடுசெய்யும்
என்பதனை உணர்கின்றேன்
அந்த நாள் வரை வாழ்ந்த
காலத்தின் நினைவுகளுடன்
வாழ்ந்து முடிக்க வேண்டியதே
வாழ்க்கையின் நியதியாகும்.

"துர்க்கா இல்லம்",
26/5, பிரம்படி லேன், கொக்குவில்.
T.P.No: 0773164535.

உமது நினைவுகளுடன் வாழும்:
வ.தம்பிராஜா.
கணவர்.



### திருமதி கணேஸ்வரி தம்பிராஜா

(முன்னாள் அலுவலக உத்தியோகத்தர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

திதி: 10.12.2007

(68690)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வெள்ளியன்று வாக்கெடுப்பில் மஹிந்தரின் அரசு தப்புமா?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு வரவு - செலவுத் திட்டம் தொடர்பான இரண்டாவது கண்டத்தில் தாக்குப் பிடிக்குமா என்பது இன்னும் நான்கு நாள்களில் தெரிந்துவிடும். வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பின் மீதான - இறுதிக்கட்ட - வாக்கெடுப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை நாடாளுமன்றத்தில் இடம்பெறும்போது இந்த அரசு நீடிக்குமா, இல்லையா என்ற தலையெழுத்து நிர்ணயிக்கப்பட்டுவிடும்.

முடிவு எந்தப் பக்கமும் அமையலாம் என்ற நிலையில் கத்தி மீது நடப்பது போன்ற நெருக்கடியை அரசு எதிர்கொண்டிருக்கின்றது.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் 118 - 102 என்ற அடிப்படையில் 16 மேலதிக வாக்குகளால் மிக வலுவான வெற்றி ஒன்றை எட்டிய அரசினால், அடுத்த வாக்கெடுப்பிலும் அதையே ஈட்ட முடியுமா என்பதே கேள்வி.

கடந்த வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈழவேந்தனும், கனகசபையும் கலந்துகொள்ளவில்லை. அவர்கள் இருவரும் இம்முறை கலந்துகொண்டு அரசுக்கு எதிராக வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேபோல அந்த வாக்கெடுப்பில் கடந்த முறை கலந்து கொள்ளாத ஜே.வி.பியின் அதிருப்திக்குழு எம்.பியான நந்தன குணதிலக இம்முறை அரசுத் தரப்புக்கு ஆதரவாகவும் -

ஸ்ரீல.சு. கட்சியிலிருந்து எதிரணிக்குப் பாய்ந்த நிலையில் கடந்த தடவை வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாத விஜேதாஸ ராஜபக்ஷ அரசுக்கு எதிராகவும் -

வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன்படி, இன்றைய நிலையில் வரவு - செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக 119 எம்.பிக்களும் எதிராக 105 எம்.பிக்களும் வாக்களிக்கும் நிலையே தென்படுகின்றது.

ஆனாலும் -

கடந்த தடவை அரசுடன் சேர்ந்து வாக்களித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் எதிர்த்து வாக்களித்த ஜே.வி.பி. ஆகியன இந்தத் தடவை என்ன செய்யப் போகின்றன என்பதைப் பொறுத்தே இறுதி முடிவு அமையப் போகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆறு எம். பிக்களும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆறு எம்.பிக்களுமாக மொத்தம் 12 பேர் அரசின் காலை வார, ஜே.வி.பி. கடந்த தடவை வாக்களித்தமை போல அரசுக்கு எதிராக வாக்களிக்குமானால், முடிவு அரசுக்குப் பாதகமாக - வரவு - செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக 107 வாக்குகளும் எதிராக 117 வாக்குகளும் என்ற நிலைமையில் - அமைந்துவிடும்.

ஆக, வெள்ளிக்கிழமையன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா., ஜே.வி.பி. ஆகியன எடுக்கப்போகும் முடிவிலேயே எல்லாம் தங்கியுள்ளன.

மு.காவைப் பொறுத்தவரை ஏற்கனவே அது அரசுத் தலைமை மீது கடும் அதிருப்தியில் இருப்பது கண்கூடு. கட்சியின் நிறைவேற்றுக்குழு வரவு - செலவுத்திட்டத்தில் அரசுக்கு எதிராக வாக்களிக்கக் கட்சியின் தலைமைப் பீடத்தை நிர்ப்பந்திக்கின்றது. ஏற்கனவே கிழக்கு பள்ளிவாசல்களின் சம்மேளனம் அத்தகைய அழுத்தத் தீர்மானம் ஒன்றை எடுத்து மு.கா. தலைமைப்பீடத்தை இக்கட்டுக்குள் தள்ளியிருக்கின்றது. கிழக்கில் முஸ்லிம்களின் தாயக மண் சிங்கள மயப்படுத்தப்பட்டு அபகரிக்கப்படல், வட பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களை பழைய இடங்களுக்குத் திரும்புமாறு அரசு வலியுறுத்தி அழுத்தம் கொடுக்கின்றமை போன்ற மலையளவு பிரச்சினைகளை வைத்திருக்கும் ஸ்ரீல. மு. காவின் தலைமை எதையும்செய்ய முடியாத நிலையில் அரசுத் தலைமையுடன் முரண்டு நிற்கின்றது. அது வெளிப்படையாகவும் தோற்றுகின்றது.

இதேபோலத்தான் இ.தொ.காவின் நிலையும். கொழும்பிலும் பிற இடங்களிலும் வகை, தொகையின்றித் தமிழர்கள் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவல் உத்தரவுகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டமை பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது. இவ்விவகாரத்தில் அரசுக்கும், அரசுத் தலைவர் ஜனாதிபதி உட்பட அதன் முக்கியஸ்தர்களுக்கும் எதிராக, அரசின் அமைச்சரவையில் இருக்கும் இ.தொ.காங்கிரஸே நீதிமன்றுக்குச் சென்று, நியாயம் கேட்டு வழக்குப் போடும் அளவுக்கு விரிசல் வெடித்திருக்கின்றது.

அரசுத் தலைமை மீது மு.காவும், இ.தொ.காவும் கொண்டுள்ள அதிருப்தி, கடந்த வார இறுதியில் வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை வாக்கெடுப்பின்போதும், அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின் போதும் அப்பட்டமாக வெளிப்பட்டது. இரு கட்சிகளினதும் மூத்த தலைவர்கள் இந்த வாக்கெடுப்புகளில் பங்குபற்றாமல் புறக்கணித்தனர். கடந்த அமைச்சரவைக் கூட்டத்தை இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் புறமொதுக்கினார்.

டிசம்பர் 14 ஆம் திகதி வாக்கெடுப்பின்போது அரசை எதிர்க்க, அரசில் தற்போதுள்ள இ.தொ.கா. முடிவு செய்து, அதை நடைமுறைப் படுத்துமானால் அதே வழியை அரசில் இடம் பெற்றுள்ள மலையக மக்கள் முன்னணியும் பின்பற்றக் கூடும். அப்படி நடந்தால் அரசுக்கான ஆதரவில் இன்னும் இரண்டு வாக்குகள் குறைந்துவிடும்.

ஆனால் இவற்றுக்கு அப்பாலும் வரவு - செலவுத்திட்டத்தில் அரசைத் தோற்கடிப்பதிலும் பல சிக்கல்கள் உள்ளன.

முதலாவது - அரசுக்கு எதிராக இந்தத் தடவை வாக்களிப்பது என மு.கா. மற்றும் இ.தொ.கா. தலைமைகள் முடிவு எடுத்தாலும், அத்தலைமைகளால் தங்களின் கட்சியில் இருக்கும் எம்.பிக்களை அந்த முடிவின்படி செயற்பட வைக்கும் செல்வாக்கும் அதிகாரமும் உள்ளனவா என்பதும் கேள்விக்குறியே.

அடுத்தது - இ.தொ.கா., மு.கா. ஆகியன அரசை எதிர்க்க முடிவு செய்து, அதில் ஒன்றுபட்டு செயற்பட முன்வந்தாலும் ஜே.வி.பி. கடைசி நேரத்தில் 'பல்டி' அடித்து அந்த முயற்சியை வெற்றிபெற முடியாமல் முறியடித்து விடலாம்.

ஆகவே, வரவு - செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் அரசின் தலைக்கு மேல் எந்நேரமும் விழக்கூடியதாகக் கத்தி தொங்கிக் கொண்டிருந்தாலும், முடிவு என்னாகும் என்பதை வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற வாக்கெடுப்புக்கு முன்னர் கூறமுடியாது என்பதே நிலைமை.

# பிரபாகரனைக் கொல்ல ராஜீவ் உத்தரவிட்டாரா?

## வெளியான தகவல்களை மறுக்கிறார்ஜி. பார்த்தசாரதி

புதுடில்லி,டிசெ.10

புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரனைக் கொல்ல ராஜீவ் உத்தரவிட்ட தகவலை திட்டவட்டமாக மறுத்துவிட்டார் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் செயலாளராகவிருந்த ஜி.பார்த்தசாரதி.

"இந்திய அமைதிப்படைத் தளபதியாகவிருந்த மேஜர் ஜெனரல் ஹர்கிரத்சிங் சொல்வதில் உண்மை ஏதுமில்லை" - என தனது மறுப்பை வெளியிட்டுள்ளார் பார்த்தசாரதி.

மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் பதவி வகித்த காலத்தில் இலங்கையில் அமைதி ஏற்படுத்தும் பணியில் இந்திய இராணுவம் ஈடுபட்டது. அப்போது இந்திய அமைதிப்படைத் தளபதியாகப் பதவிவகித்தவர் மேஜர் ஜெனரல் ஹர்கிரத் சிங். இவர் பணியிலிருந்து ஓய்வுபெற்று நாளாகிவிட்டது.

இந்நிலையில் ஹர்கிரத் சிங், "இன்டர்வென்ஷன் இன் ஸ்ரீலங்கா" என்ற தலைப்பிலான நூலொன்றை எழுதி வெளியிட்டுள்ளார். அதில், "கடந்த 1987 ஆம் ஆண்டில் இந்திய அமைதிப்படைக்கு நான் தலைமை வகித்தபோது, இலங்கைக்கான அப்போதைய இந்தியத் தூதர் ஜே.என்.தீட்சித் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கொன்றுவிடுங்கள். இது பிரதமர் ராஜீவ் காந்தியின் உத்தரவு என்று தகவல் தெரிவித்தார். ஆனால், நான் அந்த உத்தரவை நிறைவேற்ற மறுத்துவிட்டேன்" - என்று ஹர்கிரத் சிங் குறிப்பிட்டுள்ளார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந் நிலையில், அமைதிப்படைத் தளபதியின் இந்தக் குற்றச்சாட்டை, ராஜீவ்காந்தியின் செயலாளராக இருந்த ஜி.பார்த்தசாரதி மறுத்துள்ளார்.

"ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது பிரதமர் அலுவலகத்தில் இலங்கை தொடர்பான விவகாரங்களை நான்தான் கவனித்துக்கொண்டிருந்தேன். அந்தக் காலகட்டத்தில் அமைதிப்படைத் தளபதிகளையும் அதிகாரிகளையும் சந்திப்பதற்காக யாழ்ப்பாணத்துக்குப் பலமுறை சென்றிருக்கிறேன். அப்போது திறமையின்மை காரணமாக அமைதிப் படைத்தளபதி பொறுப்பில் இருந்த ஹர்கிரத்சிங் நீக்கப்பட்டுள்ளார் என்று அவர்கள் என்னிடம் கூறினார்கள்.

இராணுவத் தளபதிகள் மற்றும் அதிகாரிகளை நான் தொடர்புகொண்டு பேசியபோது, ஹர்கிரத்சிங் கூறியிருந்தமை போல உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்று தெரிவித்தனர். பொதுவாக இதுபோன்ற உத்தரவுகள் தூதுவர் மூலம் வழங்கப்படுவதில்லை என்று அவர்கள் மேலும் கூறினார்கள்.

ஹர்கிரத்சிங் புத்தகம் வெளியாகியுள்ள தற்போதைய நேரம், கேள்வியை எழுப்புகிறது. அவர் கூறியதை நம்பத் தயாராக இல்லை" - எனகிறார் ஜி.பார்த்தசாரதி.

இதற்கிடையே, இந்திய இராணுவத்தின் தென் பிராந்திய தளபதியாகப் பணியாற்றிவரும், இலங்கையில் இருந்த அமைதிப்படை நடவடிக்கைகளுக்கு ஒட்டுமொத்தத் தலைமைத் தளபதியாகப் பதவி வகித்தவருமான, ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி தீபிந்தர் சிங்கும், ஹர்கிரத் சிங் கூறியதை நிராகரித்துள்ளார் எனச் செய்திகள் கூறுகின்றன. (சி)



இலங்கையில் நடத்தப்படும் க.பொ.த. சாதாரணத் தேர்வை அகதிகளாகத் தமிழகத்தில் தங்கியிருக்கும் மாணவ - மாணவியருக்கும் நடத்துவதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள இலங்கைக்கான துணைத் தூதரும், அகதிகள் மறுவாழ்வுக் கழகமும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கும் நிலையில், தேர்வைச் சந்திக்கவிருக்கும் மாணவிகளுக்கு அனுமதி அட்டையை வழங்குகின்றார் துணைத் தூதர் அம்சா.

### கடந்த புதன்கிழமை காணாமற்போன

## பொலிகண்டிவாசி சடலமாக மாவீரர் மயானக் கிணற்றில்

யாழ்ப்பாணம்,டிச.10

வல்வெட்டித்துறை பொலிகண்டிப் பகுதியில் கடந்த 5ஆம் திகதி புதன் கிழமை முதல் காணா மற்போன குடும்பஸ்தர் ஒருவர் நேற்று நவிண்டில் எள்ளங்குள மாவீரர் துயிலும் இல்லத்தில் உள்ள கிணற்றிலிருந்து சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.

பொலிகண்டி, புலவத்தையைச் சேர்ந்த இருபிள்ளைகளின் தந்தை யாழ் வேலுப்பிள்ளை சிவயோகராஜா (வயது-45) என்பவரே மீட்கப்பட்டவராவார்.

இந்தக் குடும்பஸ்தர் கடந்த 5ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் தனது வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றார் எனவும், பின்னர் இவர் வீடு திரும்பாத நிலையில் அவரது மனைவி யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்நிலையில்,இவர் நேற்று முற்பகல் 11 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டிருக்கிறார்.

வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் மீட்கப்பட்ட இந்தச் சடலம் வல்வெட்டித்துறை, வைத்தியசாலையில் வைக்கப்பட்டது மரண விசாரணைகளைமேற்கொண்ட பருத்தித்துறை நீதி வான், சடலத்தை உறவினர்களிடம் கைய் ளிக்குமாறு உத்தரவிட்டார். (அ-203-155)

### கை, கால்கள் சங்கிலியால் கட்டப்பட்டு

## வதைக்குள்ளாகி சுடப்பட்ட இளைஞனின் சடலம் ஏறாவூரில் மீட்பு

மட்டக்களப்பு, டிச.10

ஏறாவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முறக்கொட்டாஞ்சேனை வயல் பிரதேசத்தில் வைத்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலொன்றை அடுத்து அங்கு சென்ற ஏறாவூர்ப் பொலிஸார் சடலத்தை மீட்டெடுத்துள்ளனர்.

தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனும், கைகள் மற்றும் கால்கள் சங்கிலியால் கட்டப்பட்ட நிலையிலும் சடலம் காணப்படுவதாகவும், சித்திரவதைக்குட்படுத்தப்பட்டும், துப்பாக்கியால் சுட்டும் இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்துக்குரியவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளைத் தாம் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

### நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 24 | செவ்வாய்க்கிழமை 11.12.2007 |
| திதி : துதியை | பி.இ 02.26 |
| நட்சத்திரம் : | மூலம் பி.ப 03.01 |
| சுபநேரம் | : 10.49 - 12.19 |
| ராகுகாலம் | : 3.19 - 04.49 |

## இருபாலைச் சம்பவத்தில் காயமுற்றவர் மரணம்

யாழ்ப்பாணம், டிசெ.10

புதிய செம்மணி வீதி, இருபாலை தெற்கு, ஆணந்தபுரம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு வீடு புகுந்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தவர் நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

அதேஇடத்தைச் சேர்ந்த எஸ்.இந்திரகாந்தன் (வயது 23) என்பவரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவத்தில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த இவர் சிகிச்சை பயனளிக்காத நிலை யில் நேற்று முன்தினம் இரவு உயிரி ழந்துள்ளார்.

அவரது மரணவிசாரணையை நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் யாழ். நீதிவான் இ.த. விக்னராஜா நடத்தினார்.

இந்தச் சம்பவத்தில் தேவராஜா சதீஸ்குமார் (வயது 18) என்பவர் அந்த இடத்திலேயே கொலையுண் டது தெரிந்ததே. (அ-1)

## வீடியோக் கடை உரிமையாளர் ஏழாலையில் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், டிசெ.10

ஏழாலை மகாவித்தியாலையத்துக்கு அருகாமையில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் வீடியோக் கடை உரிமையாளர் இனந்தெரியாத ஆயுத தாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த வீடியோக் கடை உரிமையாளரான மயூரன் (வயது 28) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்

இவர் வீதியால் சென்று கொண்டிருந்த வேளையில் மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த இனந்தேரியாத ஆயுத தாரிகள் இவரைச் சுட்டு விட்டு தப்பிச் சென்றதாக கூறப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிவான் மரணவிசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (அ-203-86)

## புலிகளின் 2 சடலங்கள் படையினரால் ஒப்படைப்பு

மன்னார், டிச.10

மன்னார், மாந்தைப் பகுதியில் இடம்பெற்ற மோதல் ஒன்றின் பின்னர் படையினரால் மீட்கப்பட்டவை எனக் கூறப்படும் இரு விடுதலைப் புலி உறுப்பினர்களின் சடலங்களை நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் விடுதலைப் புலிகளிடம் கையளித்திருக்கின்றனர்.

நேற்று முன்தினம் மாலை இந்த இரு சடலங்களும் படைத்தரப்பினரால் மன்னார், பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் நேற்று நண்பகல் அந்தச் சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் ஓமந்தைச் சாவடி ஊடாக கிளிநொச்சிக்கு எடுத்துச் சென்று விடுதலைப் புலிகளிடம் கையளித்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுமாறன் மீது தமிழக பொலிஸார் வழக்குத் தாக்கல்

மதுரை,டிசெ.10

தடைசெய்யப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் தமிழ்த் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறனுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

மதுரையில் கடந்த 31.05.2007 இல் தமிழர் தேசிய இயக்கம் சார்பில் பழ. நெடுமாறன் தலைமையில் வடக்குமாசி வீதி - மேல மாசி வீதி சந்திப்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் புலிகளுக்கு ஆதரவாகத் துண்டுப் பிரசுரம் விநியோகத்தார் எனத் திலகர் திடல் பொலிஸ் நிலைய இன்ஸ்பெகடர் சுப்புராமன் முறைப்பாடு செய்தார்.

அதன்பேரில், பழ. நெடுமாறன் மீது குற்றவியல் சட்ட அமுலாக்கப் பிரிவு 13 (1), 17 (1) கீழ் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் நடந்து 6 மாதங்களுக்குப் பின்னர் இந்த வழக்குப் பதிவுசெய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## மனித உரிமைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரம், நீதி, சமாதானம் என்பவற்றின் அடிப்படையாக மனித உரிமைகள் மற்றும் மனித கௌரவம் என்பவற்றுக்கான மதிப்புக் காணப்படுகிறது என்பதைக் குறிப்பிடுகிறது.

மனித உரிமை மீறல்களின் காரணியாகவும் வெளியீடாகவும் வறுமை காணப்படுகிறது என்பதை அங்கீகரிப்பது மனித உரிமைகளுக்கான மதிப்பின் முக்கியதோர் அம்சமாகும். ஆதலால் இவ்வருட மனித உரிமைகள் தின ஏற்பாடுகள் மாற்றத்தின் காரணிகளாக வறுமையில் வாழும் மக்களைக் கருத்தில் கொண்டு முன்னுரிமை அளித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இந்த மனோபாவமானது வறுமையை ஒழிப்பதற்கும் குறைப்பதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் கணிசமான முன்னேற்றங்களைக் கொண்டுவருவதற்கு உதவ முடியும்.

இலங்கையில் இவ்வருட மனித உரிமைகள் தினக் கொண்டாட்டத்தின் மூலம் கிழக்குப் பகுதியின் மீது விசேட கவனம் செலுத்தப்படுகிறது. அப்பகுதி பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதன் பின்னர் நீண்ட காலமாக மறுக்கப்பட்டுவந்த சுதந்திரத்தை மக்கள் அங்கு அனுபவிக்கின்றனர். எனது அரசின் நோக்கம் ஜனநாயக சுதந்திரத்தையும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தலையும் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் விஸ்தரிப்பதாகும். இந்த நோக்கத்திற்காக எமது சமூகத்தின் ஆளுமையின் அனைத்துத் துறைகளிலும் மனித உரிமைகளைப் பலப்படுத்துவதை நோக்கியதாக நாட்டில் அதற்கான நிறுவனங்கள் மற்றும் திறன் கட்டியெழுப்புகை என்பவற்றை நாம் வேண்டி நிற்கிறோம்.

### மனித உரிமைகள்
### முழு அளவில் அரசோச்சும்

எமது அரசானது மனித உரிமைகளுக்கு ஆதரவளிப்பதில் அர்ப்பணித்துச் செயற்படுகிறது. இதை, மனித உரிமைகளுக்கான தனியான அமைச்சொன்றைத் நிறுவுவதன் மூலமும், மனித உரிமை தொடர்பான பல்வேறு விடயங்களைக் கையாளுகின்ற ஐக்கிய நாடுகள் முகவராண்மைகளுடனான நெருக்கமான இடைத் தொடர்புகளின் மூலமும் காணக்கூடியதாக இருக்கின்றது.

மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், பயங்கரவாதத்தின் அச்சம் மற்றும் அழுத்தம் ஆகியவற்றிலிருந்து விடுதலைபெறல் போன்ற அனைத்து விதமான ஜனநாயக சுதந்திரங்களையும் எமது மக்கள் அனுபவிக்க உதவுவது எமது நோக்காகும். (அ-உ)

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறு தீர்வு காண்பது என்பது குறித்தும், இதற்கு சர்வதேச ரீதியில் சமயங்களின் நல்லெண்ணத்தையும் உதவிகளையும் எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது பற்றியும் கலந்துரையாடவுள்ளனர்.

இம்மாநாட்டில் கம்போடியாவைசர் சேர்ந்த புனிதமிகு டெப்வொங், மகாத்மா காந்தியின் பேத்தியான செல்வி எலா காந்தி (இவர் தென்னாபிரிக்க நாடாளுமன்றத்தின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்) பாகிஸ்தானைச் சேர்ந்த மிர் நாவாஸ்கான் மார்வட், ஜப்பானைச் சேர்ந்த வண.கலாநிதி மிக்கியோ டி.ஷினோஷக்சி, நியூயோர்க்கைச் சேர்ந்த கலாநிதி வில்லியம் எவ்.வென்ட் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் உள்ளூர் இணைப்பாளர்களாக தேசிய சமாதானச் சபை மற்றும் சமாதானத்திற்கான சமயம் என்பன செயற்படவுள்ளன. இந்த மாநாட்டில் பங்குபற்றுபவர்கள் ஊடகவியலாளர்கள் மாநாடு ஒன்றையும் எதிர்வரும் 14ஆம் திகதி நடத்தவுள்ளார்கள். மாநாட்டில் கலந்துகொள்ளும் சமயத் தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் நாட்களில் அரசியல் மற்றும் சமூக அமைப்புகளின் தலைவர்களையும் சந்திப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)


மாபெரும் இரசாயனவியல் கருத்தரங்கு

யாழ் .முன்னணி ஆசிரியர்
V.C.அன்பழகன்
நடத்தும் தொடர் கருத்தரங்கு

விடயங்கள்
1) Hybridization 2) DBlock elements
3) Chemical bonding
4) கற்றயன் பண்பறிபகுப்பு
5) அன்னயன் பண்பறிபகுப்பு

நாளை 11.12செவ்வாய் தொடக்கம்
தொடர்ந்து நடைபெறும்

NEW SCIENCE CENTRE
யாழ் நகர்
Properitor:- Poopalasingam


## இலங்கைக் கடற்படைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கைக் கடிதமொன்றை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அனுப்பி வைத்திருக்கும் வைகோ, 'இலங்கை இராணுவத்துக்கு ஆயுத உதவிகள் வழங்குவதை இந்தியா நிறுத்திக் கொள்ளவேண்டும். ஏலவே வழங்கிய ஆயுதங்களையும், 'ராடார்' களையும் திருப்பிப் பெறவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

வைகோவின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பவை எனக்கூறி தமிழக இணையத் தளங்களில் வெளியானவை வருமாறு:-

''பாக்.நீரிணையில் ஒருபோதும் இலங்கைக் கடற்படை வேண்டுமென்றே இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை. பன்னாட்டு கடல் எல்லையில் இலங்கைக் கடற்படைக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடக்கின்ற துப்பாக்கிச் சண்டையில்இந்தியமீனவர்கள்வந்து மாட்டிக் கொள்கிறார்கள். மேலும் மீனவர்கள் குற்றம் சாட்டுவது போல இலங்கைக் கடற்படைப் படகுகள் ஒரு போதும் இந்திய கடல் எல்லைக்கு உள்ளே வந்து இந்திய மீனவர்களை தாக்கியது இல்லை" - என்று இந்தியப் கடற்படையின் தமிழ்நாடு பொறுப்பாளர் கட்டளைத் தளபதி வேன்ஹேல்டரென் கூறினார் என பத்திரிகைகளில் வெளியாகியுள்ள - நியாயப்படுத்த இயலாத - உண்மையில்லாத - பொறுப்பற்ற - கருத்துக்களைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

*எந்தக் கடற்படையில் பணியாற்றுகிறார்கள்?*

இந்தியக் கடற்படையினர் இவ்வாறு இலங்கை அரசுக்கு ஆதரவாக அறிக்கைகள் வெளியிட்டும், கருத்துக்களை வெளியிட்டும் வருவது மிகுந்த கவலையை அளிக்கிறது. அவர்கள் இந்தியக் கடற்படையில் பணியாற்றுகிறார்களா? அல்லது இலங்கை கடற்படைக்காக பணியாற்றுகிறார்களா? என்ற ஐயத்தை இது ஏற்படுத்துகிறது.

இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டமை குறித்து இந்திய அரசே நாடாளுமன்றத்தில் பல முறை ஒப்புக் கொண்டுள்ளது.

இலங்கைக் கடற்படைக்கு உதவவேண்டும் என்று திட்டமிட்ட நோக்கத்துடன், இந்தியா செயல்படுபடுவதும்,இந்தியக் கடற்படை அதிகாரிகள்,எல்லையை மீறி கருத்துக்களை வெளியிட்டு இலங்கையை ஆதரிப்பதும் எதைக் காட்டுகிறதென்றால், நேருவால் வகுக்கப்பட்டு,இந்திரா காந்தியால் செயல்படுத்தப்பட்ட இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை குழி தோண்டி புதைக்கப்பட்டுவிட்டதோ என்பதைத்தான்.

அதைவிடக் கொடுமை,இந்தியக் கடற்படையினர் இந்திய மீனவர்களைப் பாதுகாப்பதற்காக எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொண்டது இல்லை. ஒரு முறையேனும் இலங்கைக் கடற்படைக்கு அவர்கள் எச்சரிக்கை கூட விடுத்ததும் இல்லை.

எனவே, இலங்கைக் கடற்படையினருக்கு ஆயுத உதவிகள் செய்வதை இந்தியா நிறுத்திக் கொள் ளவேண்டும் என்றும், ஏற்கனவே இலங்கை விமானப் படைக்கு வழங்கிய ராடர்களை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும் என் றும், தங்கள் எல்லையை மீறிச் செயல்பட்டு வரு கின்ற இந்தியக் கடற் படை அதிகாரிகளை எச்சரிக்கைசெய்யவேண்டும் என்றும் தங்களை கேட்டுக் கொள்கிறேன் - இவ்வாறு வைகோ தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (சி)

## ஈழத் தமிழ் இளைஞன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்ல சென்னை விமான நிலையத்திற்கு வந்தார் என்றும் -

அங்கு அவரிடம் குடியுரிமைச் சோதனை நடத்தப்பட்டவேளை குவிந்தன் வேறு பெயரில் போலிக் கடவுச்சீட்டு மற்றும் 'விஸா'வில் பரிஸ் செல்ல முயன்றமை தெரியவந்தது என்றும் -

இதைத் தொடர்ந்து அவர் விமா நிலையப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் - தமிக நாளேடுகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

## ஊடக அடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டம், பேரணியாக அப்பகுதியில்இருக்கும் ஊடக அமைச்சு வரைக்கும் செல்லவுள்ளது.

ஐந்து ஊடக அமைப்புகள் ஒழுங்கு செய்துள்ள இந்தப் பேரணிக்குப் பத்திரிகை ஆசிரியர் ஒன்றியம், இலங்கைப் பத்திரிகை உரிமையாளர் சங்கம் என்பன ஆதரவளிக்கின்றன. (சி)

## பரீட்சாத்திகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சா/த பரீட்சை ஆரம்பமாவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். இன்று ஆரம்பமாகின்ற பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி வரை நடைபெறுகின்றது. இம்முறையும் இப்பரீட்சையை நடத்த தேவையான பரீட்சை வினாத்தாள்களை பாதுகாப்புப் படையினர் கொழும்பிலிருந்து விமானம் மூலம் கொண்டுவந்து கையளித்தனர். பரீட்சை நடைபெறும் காலங்களில் மாணவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்கப் படையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

மாணவர்களின் கல்வி தொடர்பில் எப்போதும் முன்வந்துதவும் பாதுகாப்புப் படையினர் இக்காலப் பகுதியில் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றக்கூடிய சூழலை ஏற்படுத்துவதற்கும் தேவையான போக்குவரத்து கிரமமாக செய்து கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன், மாணவர்கள் பரீட்சையில் முழு ஈடுபாட்டுடன் தோற்றுவதற்கான மனநிலையை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

மாணவர்கள் சிறப்பாக பரீட்சையில் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று தமது இலக்கை அடைய வேண்டும் என்று இராணுவத்தினராகிய நாம் இறைவனை வேண்டுகின்றோம் - என்று உள்ளது.

## வரவு - செலவுத் திட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இத்தகவல்களைத் தெரிவித்திருக்கின்றார். அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு:-

வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாவது வாசிப்பில் 16 மேலதிக வாக்குகளால் அரசு வெற்றி பெற்றது. அதிலும் விடக் கூடுதலான பெரும்பான்மையோடு மூன்றாவது வாசிப்பிலும் வெற்றி பெற்று, வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவோம்.

அத்தோடு, எதிரணியிலிருந்து - குறிப்பாக ஐ.தேசுட்சியிலிருந்து மேலும் பலர் அரசுத் தரப்புக்குப் பாய்வர்.

அப்படி வருவோருக்கும் இடமளிப்பதற்காக அமைச்சரவை மீளாய்வு ஒன்று - மாற்றம் ஒன்று - செய்யப்படும்.

வரவு - செலவுத் திட்டத்தின் பின்னர் இந்த அமைச்சரவை மாற்றத்தை நீங்கள் எதிர்பார்க்கலாம் .

இந்த வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில்எந்தநெருக்கடியும்அரசுக்கு ஏற்பட மாட்டாது. அப்படி இக்கட்டு ஏதும் ஏற்படும் என்ற எண்ணப் போக்கே - சந்தேகம் ஏதும் - அரசுத் தரப்பில் இல்லவே இல்லை. - என்றார் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே. (உ)


சுடர் ஒளி
THE SUDAR OLI
டிசெ.02 - டிசெ. 08 2007

பல அரசியல் கட்டுரைகளுடனும் வழமையான சுவையான அம்சங்களுடனும் இன்று விற்பனையில் உள்ளது.
உங்கள் உதயன் விநியோகஸ்தர்களிடம் கேட்டுவாங்குங்கள்!


## மரண அறிவித்தல்கள்

### குற்றாலிங்கம்.நடராசா ஆச்சாரி

158/1, தேவிஅச்சக ஒழுங்கை, நாவலர் வீதியைச் சேர்ந்த குற்றாலிங்கம் நடராஜா ஆச்சாரி நேற்று (09.12.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் லட்சுமிஅம்மாவின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2007) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திதிற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
ந.நித்தியானந்தன்
குடும்பர் (நித்தி மகன்)

### கந்தசாமிப்பிள்ளை ராசரத்தினம்

[வைத்தியசாலை இளைப்பாறிய ஊழியர்]

அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமிப்பிள்ளை ராசரத்தினம் நேற்று காலமானார்.

அன்னார் கந்தசாமிப்பிள்ளை-சின்னத்தங்கத்தின் மகனும், கனகம்மாவின் கணவரும், குணராணி (லண்டன்), கனகலிங்கம் (சுவிஸ்), கனகராணி (கொழும்பு), குணரட்ணம் (கனடா), வரதராணி, கேதீஸ்வரி (கனடா), குலசிங்கம் (சுவிஸ்), கமலேஸ்வரி (கனடா), சிவகுமார் (கனடா), ராஜகுமார் (லண்டன்) ஆகியோரின் தந்தையும், கந்தசாமி, பூபதி, பரமேஸ்வரன், தெய்வராணி, சிவஞானசுந்தரம் (அமரர்), சிவனேசன், சுபாசினி, நாராயணஞானம், சர்மிளா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2007) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் பூவரசம் திட்டி இந்து மயானத்திதிற்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாற்றந் தோட்டம்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி
தகவல்:
கனகம்மா (மனைவி)


எடிசன் அக்கடமி

தரம் 06 முதல் O/L வரை
ENGLISH MEDIUM & TAMIL MEDIUM CLASSES
தமிழ்மொழி மூல, ஆங்கில மொழிமூல வகுப்புகள்

ஆரம்பம்

| யாழ்ப்பாணம் | நல்லூர் | கொக்குவில் |
|---|---|---|
| 12.12.2007 புதன் 9.30 am | 12.12.2007 புதன் 11.00 am | 15.12.2007 சனி 10.45 am |

* கொக்குவில் புதிய கிளைக்கான அனுமதிகள் 10.12.2007 முதல் வழங்கப்படும்.

குறிப்பு
* 1999 Dec முதல் 2006 Dec வரை யாழ்.மாவட்டத்தில் தொடர்ந்து 8 வருடங்களாக அதிகூடிய 10 D, 10 Aகளை பெற்று வரும் ஒரே நிறுவனம்
* 1996 Dec முதல் 2006 Dec வரை 46 மாணவ, மாணவிகள் 10 D, 10 Aகளை எமது நிறுவனத்தில் பெற்றுள்ளார்கள்.
* 1999 Dec இல் இருந்து மாவட்ட நிலைக்கான முதலிடம் மூன்று முறை அறிவிக்கப்பட்டது. அம் முறையும் எமது நிறுவன மாணவர்களே முதலிடம் பெற்றுள்ளார்கள். பெயர் விபரம்...

| 2002 Dec | 2003 Dec | 2006 Dec |
|---|---|---|
| K. தர்சனன் | K. தர்ஷனா | K. எழில்வேள் |

(68687)

கொக்குவில் புதிய கிளை - 02
மைதான ஒழுங்கை, கொக்குவில்



எமது நிர்வாகக் கட்டமைப்பின் கீழ்
யாழ். மாவட்டத்தில் இயங்கும் கல்வி நிலையங்கள்

அனைத்து நிறுவனங்களிலும் ஒரேநாளில்
வகுப்புக்கள் ஆரம்பம் 10.12.2007 திங்கட்கிழமை பி.ப 3மணி

| | | | |
|---|---|---|---|
| DCM மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். | ஸ்கந்தா கல்வி நிலையம் மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. | CTC சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை. | ஸ்கந்தா கல்வி நிலையம் தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை. |
| ஸ்கந்தா கல்வி நிலையம் புதுறோட், காரைநகர். | CTC சக்கலாவோடை, காரைநகர். | நுண்கலைக் கல்லூரி பிரதான வீதி, காரைநகர். | |

அனுமதிகளை அந்தந்த அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளவும்
(65606)
நிர்வாகப் பணிப்பாளர்
கோவிந்தபிள்ளை சிறீவரதன்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org